Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுநயே நம:

★

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீமதுபயவே-காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமிகளின்
நூல்களிலிருந்தும் ஸ்ரீராமாநுஜன் பத்திரிகையிலிருந்தும் திரட்டப்பட்ட
நூற்றெட்டு விஷயங்களைக் கொண்டது.

ஸதுப்ரச்நரத்நாவளி

Released by Maran's Dog ,Toronto, Canada

திருவல்லிக்கேணி ஸ்ரீமான் V. P. ராமாநுஜாசாரியார்
திரட்டினவர்.

தியாகராயநகர் முடும்பை கண்ணன் ராகவாசாரியார்
பரிஷ்கரித்துப் பதிப்பித்தவர்.

Printed at The Navaneetham Printers, Triplicane, Phone: 843057

1979 விலை ரூ. 2.

Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

முகவுரை

ஸ்ரீமதுபயவே காஞ்சீபுரம் மஹாவித்வான் ஸ்வாமிகள் வடமொழி, தென்மொழி, வடுகு மொழி, ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் இதுகாறும் வெளியிட்டுள்ள நூல்கள் ஆயிரத்திருநூற்றேழு (1207) என்று கணக்கிடப்பட்டுள்ளது. மாதந்தோறும் ஸ்ரீஸ்வாமி நடத்தி வரும் ஸ்ரீராமாநுஜன் பத்ரிகையில் (அட்டையின் கடைசிப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டு வருவதாவது)

P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் நூல்துறைகள்

1. நாலாயிர திவ்யப்பிரபந்த வுரைகள்
2. பூர்வாசார்ய தமிழ்ப்பிரபந்த வுரைகள்
3. ஸகல பூர்வாசார்ய ஸ்தோத்ர வியாக்கியானங்கள்
4. ஆழ்வாராசார்யப் பிரபாவ நூல்கள்
5. இதிஹாஸ புராண சரித்திர நூல்கள்
6. ரஹஸ்யார்த்த விளக்க நூல்கள்
7. வேதாந்தப் பொருள் விளக்க நூல்கள்
8. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க நூல்கள்
9. வேதவிசாரலக்ஷண நூல்கள்
10. லோகாபிராம உபந்யாஸ நூல்கள்
11. பரபக்ஷப்ரதிக்ஷேப நூல்கள்
12. உபந்யாஸஸௌபாக்ய நூல்கள்
13. வடமொழி நூல் திரள்கள்
14. ஹிந்தீ பாஷையில் நூல்கள்
15. தெலுங்கு பாஷையில் நூல்கள்
16. பூர்வாசார்ய க்ரந்த வெளியீடுகள்

இங்ஙனே வெளிவந்துகொண்டிருப்பதைக் கண்டிருக்குமவர்களுக்கு நாம் விரிவாகத் தெரிவிக்க வேண்டியதொன்றுமில்லை. இவை பெரும்பாலும் உலகம் முழுவதும் பரவியிருக்கின்றபடியாலும் விரித்துரைக்க வேண்டா. ஆனால் இந்நூல்களெல்லாம் இப்போது விரும்புமவர்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடியவை தானா? என்று பார்க்குமளவில் அப்போதைக்கப்போது மறுபதிப்புகளும் (Reprint) நடந்துகொண்டே வருவதாகத் தெரிவதனால் பெரும்பாலும் கிடைக்கக்கூடியவையென்றே சொல்லலாம். சிலபல நூல்கள் கிடைக்கக்கூடாதவையாயுமுள்ளன. அவை பெரும்பாலும் உபந்யாஸ நூல்களாகவும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க நூல்களாயுமிருக்கும் உலகுக்கு அவை மிகவும் முக்கியமாகக் காண்பதனால் அவற்றையெல்லாம் ஒன்று விடாமல் மறுபதிப்புச் செய்யப் பல ஊர்களில் பல பெரியார்கள் கூடிச் சபைகள் ஏற்படுத்தி அவற்றின் மூலமாக அச்சேற்றி வருகிறார்கள்.

தலைமைக் கார்யாலயம் மதுரையில் ஏற்பட்டுள்ளது "கூடலழகர் நூற்பதிப்புக் கழகம்" என்ற பெயரால் அங்கு நிறுவப்பட்டுள்ளது. அதற்கு முக்கியஸ்தர்கள் (மதுரை) ஜில்லா ஜட்ஜ். உயர் திருவாளர் M.A. முருகேசனவர்கள், ஸ்ரீமான் உ. வே. R. ரங்கராஜய்யங்கார் எம்.ஏ.பி.டி' (மதுரை), மா. செல்லப்பெருமாள் கோனார் மற்றும் சிலருமுளர். இப்படி நடத்தி வருபவர்கள் மதுரையில் மட்டுமல்ல; திருநெல்வேலி ஜில்லா வள்ளியூரிலும் சென்னை மாநகரத்திலும் கிளைக் காரியாலயங்களை ஏற்படுத்திப் பிரபல முயற்சிகள் செய்து வருகிறார்கள். ஸ்ரீமான் உ.வே. V.P. ராமாநுஜாசாரியார் ஸ்வாமியைத் தலைவராகவும், புலிபாடி, ஸோமஸுந்தரராவ், அன்னம், ரங்கநாதன் ஆகிய இவர்களைக் காரியதரிசிகளாகவுங் கொண்ட இந்த சபை சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. விலாஸம்— "காஞ்சீ ஸ்வாமி நூற்பதிப்பு" கழகம் கிளையாபீஸ், ஸத்ஸம்ப்ரதாய நிகேதனம், வரதாமுத்தியப்பன் தெரு, மதராஸ் 600 001,

விவரங்கள் தெரிந்துகொள்ள இந்த விலாஸத்திற்கெழுதலாம், மதுரைஸபையோரும் வள்ளியூர்ஸபையோரும் அச்சிடுமவையும் இங்கே கிடைக்கும்.

காஞ்சீபுரம் ஸ்வாமியின் நூல்களிலும் வியாஸங்களிலும் தற்காலம் மறுபதிப்புச் செய்யவேண்டியவைகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் பணியில் அடியேன் நியமிக்கப்பட்டிருக்கிறேன், இப்பணியை அடியேன் பெரும்பாக்கியமாக ஏற்றுக்கொண்டு யதாசக்தி பணிபுரிந்து வருகிறேன்.

அடுத்தபடி ஸ்ரீ காஞ்சீபுரம் ஸ்வாமியின் திருவாக்கு வெற்றி என்னும் நூல் வெளிவரும்.

இப்படிக்கு
மூடும்பை கண்ணன் ராகவாசாரி
தியாகராயநகர், சென்னை-17.

acharya.org

ஸ்ரீரஸ்து

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சதுப்ரச்நரத்நாவளி

—ஸ்ரீதேசிகன் வைபவ நூல்களைப்பற்றி—

ஸ்ரீமான் V. P. ராமாநுஜாசாரியர், திருவல்லிக்கேணி.

ஸ்ரீமதுபயவே ஸ்ரீ காஞ்சீபுரம் ஸ்வாமியின் நூல்களில், நாளடைவில் துர்லபமாய்ப் போன நூல்கள் பலபல. அவற்றையெல்லாம் மறு பதிப்புச் செய்ய வேணுமென்று முயற்சி கொண்ட மஹான்கள் சிலர் (மதுரை மாநகரத்தவர்கள்) அச்சிடத் தொடங்கியிருப்பதறிந்து மிக மகிழ்கிறோம். ஸ்ரீஸ்வாமியால் மாதந்தோறும் நடத்தப்பட்டு வரும் ஸ்ரீராமாநுஜன் என்னும் பத்திரிகையை அடியேன் ஆரம்பம் முதல் விடாமல் அநுபவித்து வருபவன். உலகில் சில பத்திரிகைகள் ஒருகால் பார்த்து விட்டு உள்ளே வைக்கக் கூடியவையுண்டு. ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீவைஷ்ணவஸுதர்சநம், ஸ்ரீரங்கநாத பாதுகை போன்ற பத்ரிகைகள் போல் காஞ்சிஸ்வாமியின் ஸ்ரீராமாநுஜன் பத்ரிகையும் நெடுங்காலம் சேமித்து வைக்கத் தக்கதென்பது அனேக மஹான்களின் அபிப்ராயம். அடியேன் சிறிய ஞானத்தன். ஸ்ரீபாஷ்ய பகவத் விஷய ஸ்ரீவசன பூஷணாதிகளைக்கொண்டு போதுபோக்க யோக்யதையற்றவன். மேலே சொன்ன ஸம்ப்ரதாய பத்ரிகைகளைக் கொண்டே போது போக்கி வருகிறேன். காஞ்சிபுரம் ஸ்வாமியின் நூல்களும் பத்ரிகையுமே பெரும்பாலும் போது போக்கு. அடிக்கடி பழைய பத்ரிகைகளை யெடுத்துப் பார்ப்பேன். அவற்றிலுள்ள விஷயங்களை அப்போதப்போது பார்த்திருந்தாலும் என்றைக்கெடுத்துப் பார்த்தாலும் நவம் நவமாகவே தோற்றும். அவற்றைப் பிற்காலத்தவர்களும் வாசித்து அநுபவிக்க வேணுமென்கிற ஆசையினால் அவற்றை யெல்லாம் தொடர்ச்சியாக மறுபதிப்புச் செய்து வைக்க வேணுமென்று குதூஹலமுண்டாகிச் சில அன்பர்களைத் துணை கூட்டிக் கொண்டு இப்பதிப்பை ஆரம்பிக்கிறேன். சில பல வருடங்களுக்கு முன் ஸ்ரீராமாநுஜனில் வெளிவந்த சில விஷயங்களை நெஞ்சிற்கொண்டு அடியேன் இந்த சதப்ரச்ந ரத்நாவளியை சேகரித்து வெளியிடுகிறேன்.

1. நாதமுனிகள் சரித்திரம், ஆளவந்தார் சரித்திரம், உடையவர் சரித்திரம், ஆழ்வான் சரித்திரம்... என்றிப்படியுள்ள பூர்வாசார்ய சரித்திரங்களை திவ்யஸூரி சரிதம், யதிராஜவைபவம், பின்பழகியபெருமாள் ஜீயர் குருபரம்பராப்ரபாவம் முதலான ஸம்ப்ரதிபந்ந க்ரந்தங்களைக்கொண்டு அறிகிறோம். தக்க ஆதாரமின்றிச் சொல்லப்படும் கதைகள் கட்டுக்கதைகளென்று கழிக்கப்படும். 600 ஆண்டுகட்கு முன்பெழுந்தருளியிருந்த ஸ்ரீதேசிகனுடைய சரித்திரத்தை நீங்கள் எந்த ஆசாரியருடைய நூலை மூலாதாரமாகக்கொண்டு சொல்லிவருகிறீர்களென்பதைத் தெரிவிக்கமுடியுமா? கோவில் சண்டைகளுக்காக ஸமீபகாலத்தில் ஏற்பட்டுக்கொண்ட ஸம்பந்தமே காரணமாக தேசிக சரித்திரத்தையெழுத உங்களுக்கதிகாரம் வந்துவிடுமா?

2. ஜகத்விக்யாதர்களான கவிகள் பண்டிதர்கள் ஆசாரியர்கள் ஆக இவர்களைப் பற்றி யாரும் பெருமைகளை யெழுதலாம். பூனா, பாம்பே, கல்கட்டா, காசி முதலான நகரங்களில் ஆயிரக்கணக்கான புராதன நூல்களை ஸம்பாதித்து சோதித்துப் பதிப்பிக்குமவர்கள் நூலாசிரியர்களின் சரித்திரங்களை முன்னுரையாக எழுதி வெளியிடக் காண்கிறோம். எழுதுமவர்கள் அந்த நூலாசிரியர்களோடு ஒரு தொடர்பு உடையவர்களா யிருக்க வேண்டுமென்கிற நியதி யாதொன்றுமில்லை. உலகுக்குப் பேருதவி புரிந்தவர்களென்னும் காரணத்தினால் லோகமாந்யர்களான மஹான்களின் சரிதைகளை யாரும் எழுதலாம். ஆனால் ஸ்வச்சந்தமாக எழுதினால் அதற்கு மதிப்பு ஏற்படாதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இல்லையா?

acharya.org

3. தேசிகனுடைய சரித்திரத்தை நீங்கள் எந்த ஆதாரத்தைக் கொண்டு ப்ரவசனம் பண்ணி வருகிறீர்கள்? என்று கேட்டால் அந்த ஆதாரத்தைத் தெரிவிக்க வேணுமல்லவா? காஞ்சீபுரத்தி லிருந்த திருப்புட்குழியப்பாஸ்வாமியும், அவருடைய சிஷ்யர்களும் திருவயிந்திரபுரம் சேட்லூர் நரஸிம்மாசாரியரும் "பிராசீனமான மூவாயிரப்படி குருபரம்பரை லோபித்துவிட்டதென்றும், இப்போதுள்ள சரித்திர நூல்கள் கல்பிதங்களென்றுமெழுதி வெளியிட்டிருப்பவற்றைப் பார்த்திருக் கிறீர்களா? இல்லையா? திருப்புட்குழியப்பா ஸ்வாமி நியமனத்தினால் தன்றிபட்டப்பா தாதாசாரியர் ஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூரில் வெள்ளை சாத்துப்படி யுத்ஸவம் ஆரம்பித்த காலத்தில் அந்த ஐதிஹ்யம் வடகலை குருபரம்பரையிலும் காணப்படுகிறதென்று நிரூபணமுண்டானபோது வடகலை குருபரம் பரை கல்பிதமே யென்றெழுதியச்சிட்ட ஸஞ்சிகைகள் இப்போது துர்லபமானாலும் சேட்லூர் நரஸிம்மாசாருடைய நூல் ஸுலபமே யென்பதை அறிந்திருக்கிறீர்களா? அறிந்திலோ மென்கிறீர்களா?

4. மைஸூர் பரகாலமடத்தின் மூலமாக "த்ருதியப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி யருளிச்செய்த மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம்" என்றொரு நூல் தெலுங்கு லிபியில் பல வருஷங்களுக்கு முன் வெளியாகி இன்னமும் புதுமை மாறாமலே யிருக்கின்றதல்லவா? இது தானே இப்போது வடகலைஸம்பிரதாயத்திற்கு குருபரம்பரையாக விளங்குவது. இதிலிருந்துதானே முதன் முதலாக தேசிக சரித்திரம் வெளிவந்தது. இந்த புத்தகத்தை நீங்கள் பிரமாணமாக வொப்புக் கொள்ளுகிறீர்களா? அப்புத்தகம் 50—வருடங்களுக்குமுன் பரகாலமடத்திலிருந்து ஆயிரம் ரூபா செலவில் வெளியிடப் பட்டிருப்பது. அதை ஆதியோடந்தமாக வாசித்துப் பாருங்கள். பார்த்திருந் தால் "நம்முடைய ஸம்பிரதாயத்திற்கும் ஒரு குருபரம்பரை இருக்க வேணும்" என்கிற ஆசை என்ன பாடுபடுத்தியிருக்கிறதென்பதைத்தெரிந்து கொள்வீர்களே எளிதாக. இக்காலத்தில் உங்களினத்தார் அஸம்பத்தமென்று கண்டிக்கிற விஷயங்கள் அப்புத்தகத்தில் எவ்வளவு நிரம்பியிருக்கின்றன வென் பதையும் அறிவீர்கள். அந்தப் புத்தகம் உண்மையில் யாரெழுதியது? எதற்காக எழுதியது? என்றைக்கு எழுதியது? என்னும் விஷயங்களை விமர்சித்து உலகுக்குப் பேருதவியாக ஒன்று எழுது வீர்களா? அல்லது, எதற்காக எழுதுவது என்கிறீர்களா?

5. அந்தப்புத்தகம் பிராமாணிகமா? அப்ராமாணிகமா? என்பதொன்றே முக்கியமான வினா. "மௌனம் ஸர்வார்த்த ஸாதகம்" என்றிருக்குமுங்களுக்கு எந்த வினாவும் எவ்வித உத்வேகத்தையும் உண்டுபண்ணப் போகிறதில்லை, ஆனாலும் இந்தவினா மிக முக்கியமானது.

6. வேதாந்தாசார்ய விஜயமென்கிற ஆசார்ய சம்பு எவ்வளவு கம்பீரமான நூல்! ஒன்றான தேசிகராலும் அத்தகைய நூல் இயற்றவியலாதென்று பல வித்வான்கள் பகரவில்லையா? இக்காலத் தில் தேசிகனைப்பற்றி நீங்கள் சொல்லிவருகிற அஸம்பத்தங்களான ஐதிஹ்யங்களுக்கும் சரித்திரங் களுக்கும் அந்த சம்பூக்ரந்தம் இடம் தராதில்லையென்கிற காரணத்தினால்தானே. அதைப் பிரசாரத் திற்குக் கொண்டுவராமல் மறைத்திட்டீர்கள். மறைத்தாலும் அது மறையுமோ? அது தெலுங்கு லிபி தேவநாகர லிபிகளில் பிரசுரமாகி யிருக்கிறது. அந்த சம்புவிலுள்ள கதைகளையெல்லாம் ஸாரமாகவெடுத்து காஞ்சீபுரம் ஸ்வாமி பலகால் வெளியிட்டிருப்பதைக் கண்டபின்பு நீங்கள் அந் நூலில் மாச்சரியமும் கொள்ளத் தலைப்பட்டீர்களல்லவா? இல்லையெனில், தேசிக பக்தர்களென்று சொல்லிக் கொள்ளுகிற உங்களில் ஒருவரும் அந்த சம்பூக்ரந்தத்தைத் தொடாமலும் ஸ்மரியாமலு மிருப்பதற்கு இன்னது காரணமென்று உண்மையாகச் சொல்லுவீர்களா?

7. அந்நூலானது ஸப்ஸ்க்ருதமாயும் அதிலும் கடினபாகமாயுமிருப்பதனாலே அதை உபயோகிக்கின்றிலோமென்னில்; அஸ்து. அந்த நூல் பிராமாணிகந்தானென்றும், அதில் சொல்லப் பட்டவற்றுக்கு மாறான சரித்திரங்களையும் ஆதரிப்பது தவறுதானென்றும் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? அப்படி யொப்புக்கொள்ள முடியுமோ? 'அநுக்தம் அந்யதோ க்ராஹ்யம்' என்றில்லையோ? அதில் சொல்லப்படாத கதை வேறொரு நூலில் சொல்லப்பட்டிருந்தால் அதைக்

acharya.org

கொள்ளலாகாதோ? என்பீர். ஏன் கொள்ளலாகாது? தாராளமாகக் கொள்ளலாம். அப்படிப் பட்ட நூல் ஒன்று இல்லையே. இருக்குமாகில் இதுவரை சொல்லியிருக்க மாட்டீர்களா? இப்போதாவது சொல்லுவீர்களா?

8. தேசிகன் தூப்புல் என்னும் அக்ரஹாரத்தில் அவதரித்ததாக எழுதி வருகிறீர்கள். இந்த அக்ரஹாரம் தேசிகருடைய காலத்திற்கு வெகுநாள் கழித்து ஏற்பட்டதேயொழிய தேசிகர் காலத்தில் இருந்ததில்லை. தேசிகருக்கு மிகவும் பிற்பட்டவரான அப்பய தீக்ஷிதர் அங்கே வந்து வஸித்தபோது தும்பைவனம் என்கிற அக்ரஹாரத்தை ப்ரதிஷ்டை செய்ய, அதன் கொச்சை நாமமாக துப்பல், தூப்பல், தூப்பில் என்றிப்படி வழங்கிவர ஆரம்பித்ததென்று அந்த தீக்ஷிதருடைய ஸந்ததியில் தோன்றிய விச்வேச்வர தீக்ஷிதர் தாமெழுதிய அப்பய தீக்ஷித சரித்திரத்தில் வரைந்திருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையா?

9. தீபப்ரகாசரென்கிற விளக்கொளி யெம்பெருமான் ஸன்னிதியின் வாசலிலுள்ள திருமாளிகைதானே தேசிகருடையது? அந்த இடத்திற்குத் திருத்தண்கா என்றுதானே ஆழ்வார்கள் சாற்றின திருநாமம். அந்தத் திருநாமத்தைத்தானே தேசிகரும் தீபப்ரகாச ஸ்தோத்ரத்தில் ஹிமோபவநமென்றும் சிசிரவனமென்றும் அநுவதித்திருக்கிறார். அந்தத் திருநாமத்தை விட்டு தூப்பல் என்று எதற்காக வழங்கிவருகிறீர்கள்? தூப்புலென்கிற வியபதேசம் புராதனமாயிருந்தால் இது எத்தனையோ நூல்களில் ஏறியிருக்குமல்லவா? புராதனமான ஒரு நூலிலும் ஏறவில்லையேயிது. எந்த நூல்கள் கல்பிதங்களென்று தீர்ந்து விட்டனவோ அந்த நூல்களில்தானே இது ஏறியிருக்கின்றது. அவற்றின் கல்பிதத்வத்தை மற்றும் பல விஷயங்கள் போலே தூப்புலென்கிற சொல்லுமன்றோ அசைக்க முடியாதபடி ஸ்தாபித்துக் கொடுத்தது. காஞ்சியில் தீபப்ரகாசர் ஸன்னிதியருகில் தும்பைவனம் இல்லையென்றுவது அதற்குத் தூப்பலென்கிற சிதைவுவழக்கு ஏற்படவில்லையென்றுவது உங்களால் பிரமாண பூர்வகமாக நிரூபிக்க முடியுமா? தேசிகர் தண்காவை வடமொழியில் மொழிபெயர்த்திருப்பது போல தூப்பலை மொழி பெயர்த்திருக்கிறாரா? என்பது தலையான கேள்வி. இதுவொரு கேள்வியா? என்று உடாய்க்கப் பார்க்கிறீர்களா?

10. "திருமழிசை அண்ணாவப்பங்காரெழுதிய பழநடை விளக்கத்தில் தூப்புல் பிள்ளையென்றிருக்கிறது. காஞ்சீபுரம் ஸ்வாமியின் சில நூல்களிலும் தூப்புல் பிள்ளையென்றிருக்கிறது. தேசிகரால் ஆச்ரயிக்கப்பட்ட பிள்ளைலோகாசாரியரும் "சிறொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்" என்று பாடியிருக்கிறார்." என்றிப்படிப்பட்ட வீண் பேச்சுக்களைப் பேசிக்கொண்டு கிடக்கலாமேயொழிய முந்நூறு வருஷங்களுக்கு முற்பட்ட தென்கலையார்களோ வடகலையார்களோ எழுதிய ஸம்ப்ரதிபந்நமான நூல்களில் தூப்புல் பிரயோகம் ஒன்று காட்டமுடியுமா?

11. வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, திருவாய்மொழிப்பிள்ளை...... என்றிப்படி வழங்குமாபோலே நம் தேசிகரையும் பிள்ளையென்று வழங்கவேணுமென்று நீங்கள் ஒரு சமயம் ஆசை கொண்டீர்கள்; திருத்தண்காப்பிள்ளையென்று வழங்குவதில் அழகில்லையென்று கண்டு தூப்புல்பிள்ளையென்று வழங்கத் தொடங்கினீர்கள்; பிள்ளையந்தாதியென்றும் கற்பனை செய்தீர்கள். அதற்குமுன் தூப்புலென்கிற சொல் ஒரு ஸ்ரீவைஷ்ணவ நூலிலாவது ஏறியிருப்பதாகக் காட்டமுடியுமா? ஏழேழ்பிறவி தவம் புரிந்தாலும் காட்டமுடியாதே. இந்த தூப்புல் சொல்லை விட்டொழித்தால் வெகு க்ஷேமமுண்டு. ஆனால் எதையும் விடமாட்டீர்கள். பிடிவாதமென்பது பலியஸ்ஸாக இருப்பதால் அது தத்வார்த்த க்ரஹணத்தை வாழவொட்டாதன்றோ? பல வருஷமாக ரூடமூலமானவற்றை இன்றாக விட்டுவிடுவதா? என்று பார்க்கிறீர்களேயொழிய "தத்துவமுணர்ந்தபின் நகாதது தவிரவேணும்" என்கிற வுணர்ச்சி யுண்டாகவில்லையென்றால் விவேகத்திற்கு யாது பயன்? இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

எம்பெருமானாரைப் பற்றின அநுபவங்கள்

[இராமாநுச நூற்றந்தாதியிலிருந் ... ராஜஸப்ததியிலிருந்தும் யதிராஜவிம்சதியிலிருந்து]

1 மாறனடிபணிந்துய்ந்தவிராமாநுசன் ... ந்தாதி தொடங்குகின்றது. நம்மாழ்வாருடைய திருவடிகளைப்பணிந்து உஜ்ஜீவித்தவரென்று பொருள். அர்ச்சைகளில் எங்கும் நம்மாழ்வாருடைய திருவடி நிலைக்கு மதுரகவிகளென்றோ நாதமுனிகளென்றோ வ்யபதேசமின்றிக்கே ராமாநுஜனென்றே ஸார்வத்ரிகமான வ்யபதேசமிருப்பதுகொண்டு இதனையறியிடலாம். ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளில் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை யடியொற்றியே அர்த்த விசேஷ நிர்வாஹங்கள் செய்தருளியிருப்பதை அடியேனுடைய த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வத்தில்பரக்கக் காணலாம்

Released by Maran's Dog ,Toronto, Canada

2 நூற்றந்தாதியின் இரண்டாவது பாசுரத்தில் *குறையல் பிரானடிக்கீழ் விள்ளாதவன்பனிராமாநுசன்* என்று திருமங்கையாழ்வார் திருவடிகளில் அன்புமிக்கவரெனப்படுகிறது. நமது ஸம்ப்ரதாயத்தில் 'பராங்குச பரகால யதிவரர்கள்' என்கிற வ்யபதேசம் ப்ரஸித்தம் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் எம்பெருமானார் ஆகிய இம்மூவர்க்கும் ஒரு சேர்த்தியை முன்னோர்கள் செய்து வைத்தார்கள். திருவரங்கம் பெரியகோயிலில் திருவத்யயனோத்ஸவத்தில் இச்சேர்த்தியை இற்றைக்குங் காணலாம் மற்றையாழ்வாராசாரியர்கள் ஒரு கோவையாயிருப்பர்கள். இம்மூவரும் தனிச்சிறப்புத் தோன்ற நின்றுகொண்டிருந்து முந்துறமுன்னம் மரியாதை பெறுவர்கள். *மாறனடிபணிந்துய்ந்ததும்* குறையல் பிரானடிக்கீழ் விள்ளாதவன்பனாயிருந்ததும் ப்ரத்யக்ஷமாகக் காணலாயிருந்தது

3 *பேரியல் நெஞ்சே* யென்கிற மூன்றும் பாசுரத்தில் அமுதனார் தம்பக்கலில் எம்பெருமானார்க்குப் பெருகின விசேஷ கடாக்ஷப்ரவாஹத்தைப் பேசுவது விலக்ஷணமாகவுள்ளது அமுதனார் ஸாமாந்ய குலத்தில் பிறந்தவர் தமது தேஹபந்துக்களோடு கூடிவாழ்வதற்கு அவர்க்கு ருசியில்லாமையாலே ஒரு நாள் ஸ்வாமி பக்கலிலே வந்து 'நீசனேனைத்திருத்தி இவ்விடத்திற்கு உரியேனும்படி ஸ்வாமி திருவடிவாரத்திலுள்ளாரில் ஒருவர்க்கு நியமித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய உடனே ஸ்வாமி ஆழ்வானையழைத்து அமுதனாரைக்காட்டி "இவர் கோயில்கொத்தி லுள்ளவர்கட்குத் தலைவராய் நம்முடைய வாழ்முதலான நம்பெருமாளுடைய ஸ்ரீகார்யத்துக்குப் பரிவராயிருப்பரென்பது அறிவீர்; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரையநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்மிடத்தே

Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

தலைவிதியாயிற்றென்பதை அறிந்து கொண்டீர்களா? அவர் ஒப்புக்கொண்டால் அது எல்லாரையும் பத்தப்படுத்துமா என்ன? என்று நீங்கள் சொல்லிவிடலாம். அப்படிச் சொல்லுகிறீர்களா? அல்லது அதை ஆமோதிக்கிறீர்களா? என்றுதான் நான் கேட்கிறேன்.

16. அந்த உப்பிலியப்பன் வித்வானை நீங்கள் ஒரு வழிப்போக்கராக நினைப்பதற்கில்லை. அவர் ஆழ்ந்து ஆராயவல்ல பண்டிதர். உங்களுடைய் ஸம்பிரதாயத்திற்கு உபகாரமாகச் சிலபல நூல்களை வெளியிட்டிருப்பவர். அவர் உங்களுக்கு அபரிசிதரல்லர். அபரிசிதராயிருந்தாலும்விரைந்து பரிசயங்கொள்ளவேண்டிய விலக்ஷணவ்யக்தி காணுமவர். அவரை நீங்கள் நேரில் சந்தித்து தேசிக சரித்திரப் பதிப்புகளில் நீர் கண்ட மாறுபாடுகளையோ வேறுபாடுகளையோ எமக்கு எடுத்துரைக்க வேணுமென்று கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமல்லவா? நீர் அவரைச் சந்திக்கவோ கேட்கவோ லஜ்ஜித்தாலும் நீரே ஆலோசித்துப் பார்த்து நமது வினாக்களுக்கு விடையளிக்கலாமே; தேசிக சரித்திரத்தில் காலதேசங்களை மாறுபடுத்தியிருப்பதுபற்றின விசாரத்தை விட்டிடுவோம். நிகழ்ச்சி முறைகளை மாறுபடுத்தியிருப்பதாகச் சொல்லப்படுவதுண்டே இதுதானே சிகரமான தவறு. நடவாததை நடந்ததாகச் சொல்லுவதும், ஒருவிதமாக நடந்ததை மற்றொரு விதமாக நடந்ததாய்ச் சொல்லுவதுந்தானே நிகழ்ச்சி முறையில் வேறுபாடென்பது. இத்தகைய வேறுபாடுகள் நிரம்பிய தேசிகசரித்திரம் முதன்முதலாக எவரால் கற்பனை செய்யப்பட்டதென்பதை நீங்களாவது முயன்று நிர்த்தாரணை செய்ய வேண்டாமா? கற்பனையற்ற தேசிக சரித்திரம் இல்லவேயில்லை யென்கிறீர்களா? அங்ஙனம் சொல்லித்தானாகவேணும்.

17. தேசிக சரித்திரத்தில் புகுந்து கற்பனை செய்ய வேண்டிய காரணமென்ன? என்று விமர்சிக்க வேண்டியது முதன்மையான காரியம். தேசிகருடைய கவிதார்க்கிக ஸிம்ஹத்வமோ ஸர்வ தந்த்ரஸ்வதந்த்ரத்வமோ இங்ஙனே மற்றுமுள்ள பெருமைகளோ ஜகத்விக்க்யாதம். இவற்றை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாதென்பது நிர்விவாதமான விஷயமல்லவா? ஆதிகாலத்திலிருந்தே திவ்யதேசங்கள் அபலித்திரங்களென்று கொண்டு நீங்கள் ஒதுங்கியிருக்கவும் தேவாலயங்களில் தேசிகருடைய விக்ரஹ ப்ரதிஷ்டை நடந்து உத்ஸவாதிகளும் நடைபெற்று வருவதையும், கி. பி. பத்தொன்பதாவது நூற்றாண்டிலிருந்து தேவாலய பாஹ்ய ஸ்தலங்களில் தேசிகருக்கு நீங்கள் கோவில் கட்டிக் குஞலமாடப் புறப்பட்டதையும் நோக்கவல்ல விவேகிகளும் தெரிந்து கொள்ள முடியாத உண்மையுண்டா? ஆசார்யர்களின் ச்ரேணியில் தேசிகர் தவிர எத்தனையாசாரியர்கள் இல்லை; தேசிகரும் மதிக்கும்படியான ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் முதலான ஆசாரியர்களுமிருக்கின்றார்களே; அவர்களுக்குத் தனிக் கோவில்கள் கட்டவேணுமென்று யாராவது முயற்சி செய்வதுண்டோ? அந்த மஹாசாரியர்களின் புண்ட்ரஸந்நிவேசத்தைப் பற்றியோ தனியன் அநுஸந்தானத்தைப் பற்றியோ எவ்விடத்திலும் எந்த நாட்டிலும் ஒரு விவாதமும் இதுகாறும் தோன்றவில்லையே. தோன்றியிருந்தால் எடுத்துச் சொல்லுங்களே. சொல்லுவீர்களா? என்றைக்குச் சொல்லுவீர்கள்?

18. நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் கூரத்தாழ்வான் எம்பார் ஆண்டான் என்னுமிந்த ஆறு ஆசாரியர்களை யெடுத்துக்கொள்வோம். இவர்களுடையதிருவவதாரஸ்தலங்களில் திவ்யமங்கள விக்ரஹப்ரதிஷ்டை இன்று நேற்று ஏற்பட்டது? நம்முடைய புத்திக்கு எட்டாத நாளிலன்றோ ஏற்பட்டு அந்நாள் தொடங்கியே சீரும் சிறப்பும் பொலிய உத்ஸவாதிகள் நடந்து வருகின்றனவல்லவா? பிற்பட்ட ஆசாரியரான மணவாளமாமுனிகளின் தனியனை இவர்களெதிரே எதற்காகச் சொல்லுவது? என்கிற ஆக்ஷேபமோ, நாதமுனிகள் முதலான அந்தந்த ஆசாரியர்களின் தனியனைத் தொடங்கியே திவ்யப்ரபந்த ஸேவை நடக்கவேணுமென்கிற வாதமோ ஓரிடத்திலாவது தலைகாட்டிற்றுண்டோ? உண்டானால் சொல்லுங்கள் !

19. எம்பெருமானாரால் ஸ்தாபிதர்களான எழுபத்துநான்கு ஸிம்ஹாஸனாதிபதிகளின் பரம்பரை பெரும்பாலும் அநுவர்த்தித்து வருவதை அறியாதாரில்லை. அப்பரம்பரையில் வருமவர்.

acharya.org

கள் சிஷ்ய ஸம்பத்துடனே ஆசார்ய புருஷர்களாக விளங்கி வருகிறார்கள். அவர்கள், 'எம்பெருமானார் காலத்து ஆசார்ய புருஷர்களான நமது திருமாளிகையில் நம் ஆசார்யனுடைய தனியனைவிட்டு வெகுகாலத்திற்குப் பிறகு அவதரித்த மணவாளமாமுனிகளின் தனியனை ஏதுக்காக முந்துறமுன்னம் சொல்லுவது!' என்று நினைக்கலாம். ஒருவரும் அப்படி நினையாமல் தேவாலயங்களோடு, மடங்களோடு திருமாளிகைகளோடு வாசியற எங்கும் ஸமரூபமாக நடந்து வருகிற ஸம்ப்ரதாயம் இன்று நேற்று ஒருவரால் ஏற்படுத்தக் கூடியதா? இது ஒரு விவேகியினுடைய புத்தியிலும் ஏறவில்லையென்றால் அந்தோ! உங்களுடைய அபூர்வமான விவேகத்தை என்னவென்று சொல்லுவது!

20. "கைகேயி என்வயிற்றில் பிறந்த பரதனுக்கு ஸாம்ராஜ்யம் வேணுமென்று விரும்பியது போல நாங்கள் எங்களாசார்யனுக்குப் பெருமை விரும்பினால் என்ன பிசகு" என்று கேட்கலாம் இது உசிதந்தான் என்றுமிசையலாம். எப்போது இசையலாம்? தேசிகர் உங்களுக்கு அஸாதாரண ஆசாரியரென்று தேறிவிட்டால் அப்போது இசையலாம். ஐயோ! இந்த பேச்சுக்கு ப்ரஸங்கந் தானுமில்லையே. இருப்பதாக நினைக்கிறீர்களா ?

21. கி. பி. 1268 ஆம் ஆண்டில் திருவவதரித்து நூறாண்டு இவ்விபூதியில் எழுந்தருளியிருந்து திருநாட்டுக்கெழுந்தருளின தேசிகருக்கு ஸரியாய் அறுநூறாண்டுகள் நிரம்பிவிட்டன. இந்த 600 ஆண்டில் 200 ஆண்டுகளுக்கு முன் தேசிகருடைய ப்ரஸ்தாவமுள்ள நூல் உங்களினத்தவர்களால் இயற்றப்பட்டது ஒன்றுகாட்டும், காட்டியருளும் என்றுஒருவரைவேண்டிக்கொண்டால்"அரட்டன் வந்தப் பூச்சி காட்டுகின்றான் அம்மனேயப்பூச்சி காட்டுகின்றான்" என்றாப்போலே பூச்சி காட்டலாமே யொழிய வேறு ஏதேனும் காட்டமுடியுமாவென்று பாருங்கள்; இதை லேசானகேள்வியாக நினைக்க வேண்டா. ஒவ்வொரு கேள்வியிலும் உங்களுடைய சாயம் கக்குகிறதென்றாலும் அப்படி சாயம் கக்கவைக்குங் கேள்விகளில் இது தலையான கேள்வியென்று தெரிந்து கொள்ளுங்கள்! மேலும் தொடர்ந்துவருங் கேள்விகளையும் கேண்மின்.

22. தேசிகரைப்பற்றின ப்ரஸ்தாவம் மட்டுமன்று. ஆழ்வார்களைப்பற்றியோ எம்பெருமானார் முதலான ஆசார்யர்களைப்பற்றியோ, அவர்கள் வெளியிட்டருளின அர்த்தவிசேஷங்களைப்பற்றியோ ப்ரஸ்தாவமுள்ள ஸம்ஸ்க்ருத நூலோ த்ராவிட நூலோ உங்களினத்தவர்கள் செய்ததாக [விவாத காலத்திற்கு முற்பட்டதாய்] ஒன்று காட்ட முடியுமா? ஓலைச்சுவடிகளையெல்லாம் சேமித்து வைத்திருக்கின்ற ராஜகீய புஸ்தக பாண்டாகாரங்கள் பலவுமுண்டே; பரிச்ரமத்திற்கு அஞ்சாமல் ஆங்காங்குச் சென்று பரிசீலனை செய்துபார்க்கலாமே. நவீநகாலத்து நூல்கள் தவிர ப்ராசீன காலத்து நூலாக ஒன்று கூட காணக்கிடைக்காது காணீர். "புல்லுப்ய: காணலாம் தைலம் கல்லுப்ய: காணலாம் ஜலம், முசல்ப்ய; காணலாம் கொம்பு: ஏவம் கிஞ்சிந் ந காணலாம்" என்று கேட்டிருக்கிறீர்களா? அதை அநுபவத்தில் காண்பீர்களா ?

23. தென்கலை ஸம்பிரதாயத்தில் — ரஹஸ்ய விவேகம், ரஹஸ்ய ஜீவாது, ஸ்ரீவசந பூஷண மீமாம்ஸா பாஷ்யம், ரஹஸ்யத்ரய மீமாம்ஸாபாஷ்யம், சரமச்லோகடிப்பணி, தத்வஸங்க்ரஹம், ஸம்ப்ரதாய சந்திரிகை பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானங்களுக்கு அரும்பதவுரைகள், மணவாளமாமுனிகள் வியாக்கியானங்களுக்கு அரும்பதவுரைகள், அஷ்டச்லோகீ வியாக்கியானம் பெரியபடி, பரகால நல்லான் ரஹஸ்யம், ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்...என்றிப்படிப் பட்ட அரியபெரிய நூல்கள் தோன்றினது எந்தெந்த நூற்றாண்டில் என்று ஆராய்ந்து பார்க்கில் தென்னாசார்ய ஸம்பிரதாய ப்ரவர்த்தகர்களும் அவ்வாசிரியர்களின் திவ்ய ஸூக்திகளும் மணவாள மாமுனிகளின் காலந்தொட்டே இடையறாமல் தொடர்ந்து வருவதை அசைக்கவொண்ணாதபடி அறியப்பெறலாம். இப்படி தேசிகர் காலந்தொட்டு அநுஸ்யூதமாய் வருகிற நூல்களையும் நூலாசிரியர்களையும் உங்கள் ஸம்பிரதாயத்தில் காட்டுவீர்களா? இந்தக் கேள்வி உங்களை பீஜமர்த்தனம் பண்ணுகிற கேள்வி என்றாவது அறிவீர்களா? "நம்மை சண்டைக்காக இடையில் வந்து புகுந்தவர்

acharya.org

களென்று நிலைநாட்டவல்ல வினாக்களிவை" என்று தெரிந்து கொள்வீர்களா? காஞ்சி ஸ்வாமியின் ஆயிரக்கணக்கான கேள்விகளில் முக்கியமன்றோ இவை.

24 தேசிகரியற்றிய ரஹஸ்யத்ரய ஸாராதிகளுக்கு வியாக்யானமோ, ஸ்தோத்ரங்களுக்கு உரையோ, ஆறுயிரப்படிக்கு வியாக்யானமென்று கொண்ட பகவத் விஷயமோ எல்லாம் திருக்குடந்தை கோபாலதேசிகாசாரியரென்பவர்க்குப் பிறகேயொழிய அவர்க்கு முன்வரையில் உங்கள் ப்ரவரம் ஏதேனுமுண்டாவென்பதை ஆராய்ந்துபார்க்க சக்தியில்லையா உங்களுக்கு? உண்டு என்றாவது சொல்லுங்கள், இல்லையென்றாவது சொல்லுங்கள்.

25. தேசிகருடைய ஸ்ரீஸூக்திகளை உங்களினத்தவர்களில் நவீனர்கள் தவிர புராதனர்களில் ஒருவரும் தொட்டது கிடையாதென்பது மட்டுமல்ல; இக்குறைநீர தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களான முன்னோர்களும் இடைக்காலத்தவர்களும் கடைக்காலத்தவர்களும் தேசிக ஸூக்திகளை தாராளமாக ஆதரித்திருக்கிறார்களென்பதுண்டே இதையும் சேர்த்துக்கொண்டு நீங்கள் ஆராய்ச்சி செய்யவேணும். "உண்டிராக்கிடக்கும் போது உடலுக்கே கரைந்துநைந்து" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் ஸாதிக்கிறபடி போஜனாதிகளை முடித்துக்கொண்டு அப்பாடா என்று படுக்கையில் சாய்ந்தபிறகு வேறு விசாரங்களை அறவே விட்டிட்டு இந்த விசாரமொன்றையே செய்வீரா? செய்யவேண்டிய விசாரத்தை மறுபடியும் விளக்கமாகத் தெரிந்துகொண்மின்.

26. உங்கள் இனத்தவர்களின் அகாண்ட வைரத்திற்கு எல்லை நிலமானவராய் பூர்வாசார்ய பரம்பரையில் சரமாசார்யஸார்வபௌமராய் நிற்பவர் மணவாள மாமுனிகள். அவர் தாம் செய்தருளின வியாக்யான நூல்களிலே கூரத்தாழ்வான் பட்டர் நஞ்சீயர் முதலான ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளைப் போலவே எங்களாழ்வான், நடாதூரர்மாள், ச்ருதப்ரகாசிகா பட்டர், நிகமாந்த மஹாகுரு ஆகிய இவ்வாசிரியர்களின் ஸ்ரீஸூக்திகளையும் பிரமாணமாகக் காட்டியருளுகிறார். குமாரவரதாசார்யரான நயனாராசார்யருடைய ஸ்ரீஸூக்தியையும் எடுத்துக்காட்டியுள்ளார். தேசிகருடைய ரஹஸ்யத்ரய ஸாரத்திலிருந்தும் தத்வமுக்தாகலாபத்திலிருந்தும் ந்யாஸவிம்சதியிலிருந்தும் வாக்யராசிகளையும் சுலோகங்களையும் மாமுனிகள் மேற்கோள் கொடுத்திருப்பது தெரியுமா உங்களுக்கு? மணவாள மாமுனிகளென்றால் "ஸந்தாபயதி ஸ்வம் தேஹம் ஆபாததலமஸ்தகம்" என்னும்படியிருக்கிற உங்களுக்கு மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகந்தமும் தெரியாதபோது இஃது எப்படி தெரியப்போகிறது? இதற்காகவாவது அவற்றையெடுத்து ஸேவித்து வாழலாமே!

27. மணவாளமாமுனிகளுக்கும் முற்பட்டவரும், தேசிகருக்குப் பிறகு பதினாறுண்டு ஜீவித்திருந்தவருமான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயரும் தம்முடைய தத்வதீபாதிகளில் தேசிகருடைய பலபல ஸூக்திகளை உதாஹரித்து அர்த்த விவரணமும் செய்திருக்கிறார். அந்தச் சீயர்க்கு இருநூறு வருடங்கள் பிற்பட்டவராய் அந்தத் திருநாமமே உடையராய் ஸ்ரீகாஞ்சி கீழ கோபுர வாசலிலுள்ள மடத்திற்குத் தலைவரான ஸ்வாமி அருளிச்செய்ததாய் பகவத்விஷய ஸ்ரீகோசங்களில் அச்சிடப்பட்டதாயுமுள்ள "வேதாந்த சாஸ்த்ர த்ராவிடாகமாத்ய தசக த்வந்த்வைககண்ட்யம்" என்னும் மஹத்தான க்ரந்தத்தில் ஆசார்ய வந்தனமாகச் செய்துள்ள சுலோகங்களில் நான்காவது சுலோகம் "ஸ்ரீவத்ஸ சிஹ்ந தநுஜாகமகமௌலி யோகி ஸ்ரீமத்கலிந்த வரயோகி முகா மஹாந்த:. வ்யாஸார்ய வேதசிகரார்ய மஹார்யமுக்யா வேதாந்த யுக்மகுரவோ ஹ்ருதி ஸந்நிதத்யு:" என்பது. இதில் ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை மணவாளமாமுனிகள் ச்ருதப்ரகாசிகா பட்டர் வேதாந்த மஹாகுரு தொட்டயாசார் ஆகிய இவ்வாசாரியர்களைச் சிந்தனை செய்திருக்கிறார் என்பதையறிவீர்களா? அக்காலத்தில் வைஷம்யலேசமாவது இருந்ததா?

acharya.org

28. அந்த ஜீயர்ஸ்வாமிக்கும் முற்பட்டவரான சோளஸிம்ஹபுரம் தொட்டயாசாரியர் ஸ்வாமி சததூஷணிக்கு சண்டமாருதமென்கிற ப்ரசண்ட வியாக்கியானம் செய்தது, அதைத் தென்கலையார்களே அச்சிட்டது, அந்த தொட்டயாசார்யருடைய சிஷ்யரான ந்ருஸிம்ஹராஜா சார்யஸ்வாமி நியாய பரிசுத்தி முதலான சில க்ரந்தங்களுக்கு வியாக்கியானம் செய்திருப்பது, அதற்குமேல் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வித்வான்களில் நிகரற்ற வித்வானும் வேதாந்த வாதாவளீ ந்யாயபாஸ்கராத்யநேக க்ரந்த ப்ரணேதாவுமான மைஸூர் (மண்டபம்) அனந்தாழ்வான் தம்முடைய க்ரந்தங்களில் தேசிகருடைய அனேக ஸூக்திகளை ஆங்காங்கு உதாஹரித்திருக்கிறாரென்பதும், அதே நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சீபுரியில் ஸுப்ரஸித்த வித்வத் ஸார்வபௌமராக விளங்கின குன்றபாக்கம் ஸ்ரீஸ்வாமி தாம் பணித்த தத்வரத்நாவளியில் "ஜயதி பகவாந் வேதாந்தார்யஸ் ஸ தார்க்கிக கேஸரீ" என்று பணித்திருக்கிறாரென்பதும் இங்ஙனே மற்றும் பலவும் உங்களது காதில் விழுந்திருக்கின்றனவா? ஆகவிப்படி தேசிகருடைய ஸ்ரீஸூக்திகளைக் கையாண்டவர்களும் அவரை உபச்லோகித்தவர்களும் தென்னாசார்ய பரம்பரையிலே தேறு கிறாப்போலே உங்களுடைய பரம்பரையில் தேறுவதுண்டாவென்று இதைத்தான் ஆலோசித்துப் பார்க்கும்படி வற்புறுத்திச் சொல்லுகிறேன். இந்த வினாவை லேசாக நினைத்துவிடுகிறீர்களா? உங்கள் ஸமூஹம் முழுவதும் ஒன்று சேர்ந்தாலும் இதைப் பற்றி வாய்திறக்கவும் முடியாதென்பதை நன்கு உணர்வீர்களா? ஏன் உணரமாட்டீர்?

29. எலிகளெல்லாங்கூடி மார்ஜாரமந்திரம் கட்டுவது போலவும், வ்ருஷபங்களெல்லாங்கூடி வ்யாக்ரமந்திரம் கட்டுவது போலவும், ஸர்ப்பங்களெல்லாங்கூடி கருத்மானுக்குக் கோவில் கட்டுமா போலவும், கஜராஜங்கள்கூடி ம்ருகராஜனுக்கு ஆலயம் கட்டுவதுபோலவும் நீங்கள் ஊர்தோறும் தெருவுதோறும் தேசிகனுக்கு ஆலயங்கள் கட்டினதாலென்னாகும்? "ஆயிரம் ருபாய்க்கு வாண வேடிக்கை, ஆயிரம் விசிறிகளுக்கு வடகலைத் திருமண்பூச்சு, ஐந்நூறு மண்டைவிளக்குகளுடன் இரவு முழுவதும் திருவீதியுலா, புரட்டாசி யுத்ஸவத்திற்குப் பன்னீராயிரம் செலவு, திருவோணந் தோறும், இருநூறு செலவு, பாம்பே டில்லி கல்கட்டா முதலிய மஹாநகரங்களோடு, மணப்பாக்கம் அமணம்பாக்கம் அரும்பாக்கம் முதலிய அக்ரஹாரங்களோடு வாசியற இந்த மாநிலத்திலுள்ள இடங்களிலெங்கும் இடைவீடில்லாமல் தேசிகதர்சனப்ரசாரம் செய்து கொண்டாலும் ஒருலாபமு மில்லையென்பதை அறிவீர்களா!

30. இதை ஊன்றிக்கேண்மின்; "தத் விஷ்ணோ: பரமம் பதம்" என்கிற அவ்விடத்திற்கு நாம் சென்றால் "தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையேயொக்க அருள் செய்வர்" என்கிறபடியே நம்மைப் பெருமைப்படுத்துகிற அப்பெருமான்தானே நம்மை நோக்கி இவ்விருள் தருமா ஞாலத்திற்கு வந்தால் நாம் அவனுக்கு நம்முடைய சோகமோஹாதிகளைத் தருகிறோம். — என்று ஆசாரியர்கள் அருளிச்செய்வது போலே தென்கலையார்கள் தாங்கள் பரிக்ரஹித்த தேசிகனுக்கு தநிய திவ்யஸூக்தி விவரண—தத்ப்ரகாசநாதிகளாலே பெருமை விளைக்கிறார்கள் அந்நாள் தொடங்கி இந்நாள் வரையில். வடகலையார்கள் தாங்கள் பரிக்ரஹித்த தேசிகனுக்கு எவ்விதமான பெருமைகளை விளைக்கிறார்களென்பது தெரியுமா ஸ்வாமி! அந்தப்ரபாவ பரம்பரைகளைக் கேட்க விரும்புகிறீரா? கேளும் வரிசையாக. உங்களுடைய புத்தகங்களைக்கொண்டே எழுதுமிவைகாணும்.

31. கதைகள் கட்டினாலும் பொருந்தக் கட்டவேணும்; கதாநாயகருக்கு மிக்க பெருமை விளங்கும்படியான கதைகளைக் கட்டவேணும். ராமராஜ்யம் செல்லுங்காலத்தில் "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:, ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி." என்கிற படியே ராமபிரானுடைய திருக்கல்யாணகுண ப்ரசம்ஸை தவிர வேறொன்றுமிருந்ததில்லை என்றாப் போல தேசிகருடைய விபவ காலத்தில் உலகமெல்லாம் தேசிககுண ப்ரசம்ஸையேயாயிருந்தது என்கிற உண்மையை யெழுதிவைத்துத் தாங்களும் களித்துப் பிறரையும் களிக்கச் செய்யவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அந்தோ! அருவருக்கவும் தகாத அபசப்தமயமான கதைகளையன்றோ கட்டி வைத்திருக்கிறீர்கள். தேசிகர் ஸ்ரீரங்கத்தில் தமது திருமாளிகைத் திண்ணையில் எழுந்தருளி

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

யிருந்து ஸ்ரீகோசம் கடாக்ஷித்தருளாநிற்கையில், திருவீதியில் கந்தாடை ஆசார்ய புருஷரொருவர் மரியாதைகளோடு பல்லக்கில் வீற்றிருந்து சென்று கொண்டிருந்ததாகவும்; அப்போது தேசிகர் ஸ்ரீகோசம் கடாக்ஷிக்கிற பராக்கில் அதைக் கவனிக்காமலிருக்க சில துஷ்டப்பயல்கள் ஓடிச்சென்று தேசிகரை காலை வாரியிழுத்துத் தெருவிலே விழத்தள்ளின தாகவும் கதையெழுதி வைத்திருக்கிறீர்களே! அந்தோ! இப்படி கூட எழுதி வைக்கத் தோன்றுமா? இக்கதை முதன்முதலாக எந்த நூலிலேறிற்று? சொல்லுவீர்களா?

32. ஸ்ரீரங்கத்திலேயே தேசிகர் தமது திருமாளிகையிலிருந்து புறப்படும்போது (இருளில்) அவருடைய திருமுடிமீது படும்படியாகச் சில பொறாமையாளர்கள் பாதரக்ஷைகளைத் தோரண மாலையாகக் கட்டித் தொங்கவிட்டிருந்ததாகவும், அவர்கள் எண்ணமிட்டிருந்தபடியே தேசிகர் இருட்டில் வெளியே புறப்படுகையில் அந்தப் பாதரக்ஷைமாலை திருமுடியில் இடிக்க அப்போது "வயம் து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பநா." என்று உரக்கக்கத்தின அத்தேசிகருடைய திருமிடற்றோசையைக்கேட்டு இந்த விநயஸம்பத்திக்கு ஆச்சரியப்பட்ட அந்த தூர்த்தர்கள் ஓடிவந்து திருவடிகளில் விழுந்து க்ஷமாபணம் செய்து கொண்டதாகவும் எழுதி வைத்திருக்கிறீர்களே! ஐயோ இது என்ன மதியீனம்! காஞ்சிபுரத்திலிருந்து தேசிகரை ஸ்ரீரங்கவாஸிகள் அன்போடும் ஆதரவோடும் ஆளனுப்பி வரவழைத்ததாக ஒருபுறம் எழுதிவைப்பது; இப்படி நெஞ்சாலும் நினைக்கக்கூடாத ஜுகுப்ஸநீய கதைகளை ஒருபுறம் எழுதிவைப்பது. இப்படி யெல்லாம அஸஹ்யமான அபசாரங்கள்படும்படி தேசிகர் யார் தலையில் என்ன பாறையைப் புரட்டினரென்று வினவினால் விடை கூறவல்லீர்களோ?

Released by Maran's Dog ,Toronto, Canada

33. தேசிகர் செய்யவேண்டிய ச்ராத்தத்தில் நிமந்த்ரிதர்களாயிருந்த மூவரும் முன்னம் இசைந்திருந்து ஸமயத்தில் வஞ்சித்துவிட்டதாகவும், என்ன நடக்கிறது பார்ப்போமென்று அவர்கள் வேடிக்கைபார்க்க அக்கமபக்கத்தில் ஒளிந்துகொண்டிருந்ததாகவும், நித்யர்களும் முக்தர்களும் ச்வேதத்வீபவாஸிகளும் மூவுருக்கொண்டுவந்து அமுது செய்துச்ராத்தஸம்ரக்ஷணம் பண்ணினதாகவும் எழுதி வைத்திருக்கிறீர்கள். இது ஸ்தூலத்ருஷ்டியில் தேசிகருக்கு வைபவம் போல் தோன்ற நின்றாலும் சிறிது ஆலோசித்தவாறே மிகவும் அநுவருக்கத்தக்க கதை இது வென்று தெரிந்துகொள்ள முடியாதா? ஆயிரங்கால் மண்டபத்தில் அர்ஜுன மண்டபத்தில் உறங்குகிற சோம்பர்களையா ஸ்வாமி நிமந்த்ரணத்தில் வரிப்பர். தமக்கு அந்தரங்கர்களாய் நெருங்கிப்பழகும் சிஷ்டர்களையன்றோ வரிப்பர்? அன்னவர்கள் வஞ்சித்தார்களென்றால் இதற்கு ஏதேனும் அர்த்தமுண்டா? தேசிகரைக் குறித்தா இக்கதை தொடுக்கவேணும்?

Released by Maran's Dog ,Toronto, Canada

34 பதிதர்களென்றும் அபாங்க்தேயர்களென்றும் ஒதுக்கப்பட்டிருக்குமவர்களுடைய இல்லங்களில் இப்படிப்பட்ட ஸம்பவங்கள் இக்காலத்திலும் பெரும்பாலுங்காண்பதுண்டு. பங்க்தி பாவனராய் நித்யஸூரி நிர்விசேஷரான தேசிகர் விஷயத்திலா இத்தகைய அஸஹ்ய ஸம்பவங்களை ஏற்டுவது? அப்பய தீக்ஷிதருடைய சரித்திரத்தில் காணப்படுகிற இதனை தேசிக சரித்திரத்தில் இழுத்துப் போடுவதனால் லாகவமா கௌரவமா? என்பதுகூடத் தெரியவில்லையே? ஸ்ரீரங்கவாஸிகளான ஸ்ரீவைஷ்ணவர்கள் காலைவாரியிழுத்துத் தெருவிலேவிழத் தள்ளினர்க ளென்றும், பாதரக்ஷைகளைத் திருமுடியிலே படுமாறு கட்டிவைத்தார்களென்றும், ச்ராத்தத்தைக் கெடுக்கக் குநுகலித்தார்களென்றும், ஏகாதசியன்று பொங்கலுண்டையைக் கொண்டு கையில் வைத்துத் திணித்து நிர்ப்பந்தித்தார்களென்றும் இப்படிப்பட்ட அபஹாஸ்ய சரிதைகளைக் கல்பனை செய்யுமத்தால் என்ன தேறும் தெரியுமா? அதை ஆலோசித்துச் சொல்லுவீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

35. "ரஸிகமஹிதே ரஞ்ஜிதாசேஷசித்தே ரங்காஸ்நாதே" என்று உள்கனிந்து கொண் டாடிக் கூறும்படியான பெருமைவாய்ந்த ஸ்ரீரங்கவாஸிகளுக்கு ஒரு குறையும் கூற நேராது. அசேஷசித்தரஞ்ஜகர்களும் ரஸிகர்களும் ஸேவார்ஹவித்வான்களுமாக தேசிகர் கொண்டாடப் பெற்ற ஸ்ரீரங்கவாஸிகளுக்கு அவத்யலேசமும் அணுகாது. நீங்கள் நினைக்கிறபடி ஸ்ரீரங்கவாஸி-

acharya.org

க்ளான மஹான்கள் அஸூயுக்களாயும் த்ரோஹிகளாயுமிருந்தால் ஸ்வாமி துருஷ்கயவநோபத்ர வத்தால் ஸ்ரீரங்கத்தைவிட்டு வெளியேறின காலத்திலே (அபீதிஸ்தவத்தில்) "நிர்ஸ்நரிபுஸம்பவே க்வசந ரங்கமுக்யே விபோ! பரஸ்பரஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய" என்று ஸாதிக்க நேர்ந்திருக்குமா? என்பதனைச் சற்று ஆலோசிக்க மதியில்லையா உங்களுக்கு? ஸ்ரீரங்கவாஸிகள் பரஸ்பரஹிதைஷிகளென்றும் அவர்களுடைய திருவடி நிழலிலே ஒதுங்கியிருக்கை தமக்குத் தேட்டமென்றும் நன்கு காட்டியுள்ள தேசிகரை ஸ்ரீரங்கவாஸிகள் பலவிதத்திலும் ஹிம்ஸித்தார்களென்று கதை தொடுப்பது ஸ்வாமிக்கே அவத்யாவஹமென்று தெரிந்துகொள்ள முடியவில்லையா?

36. பரமபாபரர்களும் ஜுகுப்ஸிக்கும்படியான கதைகளைத் தொடுத்ததோடு நில்லாமல் "ஹந்தஹந்த! ராமக்ருஷ்ண ப்ரஷணாதிதாயிநாம் கிந்து சித்ரமத்ர சைத்யராவணாநுஸாரிணாம்" என்றிப்படி மிலேச்சபாஷிதங்களைப் பரமபாதகர்களின் திருவாக்காக எழுதிவைத்து ஸ்வகோஷ்டிகளில் கோஷிப்பதும், நால்வர் பதின்மர் திரளுமிடங்களிலே இந்த சுலோகத்தைச் சொல்லிக் கண்ணீரைப் பெருக்கி "ஐயோ! ராவணனையும் சிசுபாலனையுமொத்த தென்கலையார்கள் நம்ம தேசிகனுக்கு இழைத்த இன்னல்களைப் பேசினால் ஒரு மஹாபாரத மாகுமே! என்று சொல்லி விக்கி விக்கியழுவதும், நீங்களும் அழுங்கோளென்று சொல்லிப் பிறரையும் அழச்செய்வதும், நீதிமன்றங்களிலும்கூடக் கண்ணீர் பெருக்குவதுமாகப் போதுபோக்கிவரும் ஓர் அட்வகேட்டு தான் உண்மையான பக்தரென்று அறிந்துகொள்வீர்களா?

37. ஒரு மருமம் கேளீர். ஒரு மஹாசார்யரைப் பார்த்து 'உம்மைப் பாதரக்ஷையால் ப்ரஹரிக்கிறேன்' என்று சொல்லுவதும் 'எங்களாசார்யரைச் சில பாபிகள் ப்ரஹரித்தார்க' ளென்று பறை சாற்றுவதும் இரண்டும் துல்யபாபமேயென்றும் தெரிந்துகொள்ளவில்லையா நீங்கள்? தேசிகரை ஸ்ரீரங்கவாஸிகள் அப்படி பரிபவப்படுத்தினார்கள், இப்படி பரிபவப்படுத்தினார்கள் என்று எழுதிவைப்பதற்கும் பேதப்பட்ட பாதகமில்லையே. உண்மையில் இப்படிப்பட்ட பரிபவங்கள் தேசிகருக்கு விபவத்தில் ப்ராப்தமாயிருந்தால் அப்போது பிறந்திருந்த நீங்களே அந்தப் பரிபவங்களை இழைத்திருப்பீர்களென்பதில் ஸந்தேஹமில்லை. தேசிகரை இப்போது பரிபவிப்பவர்கள் நீங்களேயென்பது ப்ரத்யக்ஷமாயிருப்பதால் இதைக்கொண்டு அதை நிச்சயிக்கத் தட்டுண்டோ? பொய்யும் புளுகும் பொதிந்த பேய்க்கதைகளைக் கட்டிப் பிரசாரம் செய்துவருவதோடு நில்லாமல் பொய்யான தனியன் வாழிகளையும் கட்டி கோஷித்துப் பரிபவமடைவித்து வருகிறீர்களா இல்லையா?

38. ஸ்ரீசைலேசதயாபாத்ரம் — ராமாநுஜதயாபாத்ரம் என்னுமிந்த இரண்டு சுலோகங்களையும் பார்க்கும்போது இரண்டும் ஒரே சாயலாக இல்லையா? தேசிகர்க்கு ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய தனியன்தான் முற்பட்டதென்று ஒப்புக்கொள்ளுகிறீர்கள். அது எவ்வளவு கம்பீரமான சுலோகமென்பதை ஒவ்வொருவருடைய உள்ளமும் அறியுமல்லவா? இருக்கிறது ராமாநுஜதயாபாத்ர மென்னும்போது ராமாநுஜ பதம் ஸ்வாசார்யரான ஆத்ரேய ராமாநுஜாசார்யரான கிடாம்பியப்புள்ளாரைச் சொல்லுகிறதென்றும் எழுதுகிறீர்கள்; அப்புள்ளாரையாவது சொல்லட்டும், ஒன்றுமறியாத பகவத்ராமாநுஜரையாவது சொல்லட்டும், அதில் விவாதப்படுவாரில்லை. ஸ்ரீராமாநுஜ என்றோ ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய என்றோ, சொல்லாமல் மொட்டையாக (ராமாநுஜ) என்றிட்டு ஒரு ப்ராஜ்ஞர் தனியனியற்றுவரா? என்று இவ்வளவுகூட ஆலோசிக்க மாட்டீர்களா? மஹநீயரான ஒரு ஆசார்யரை (ராமாநுஜ) என்று இவ்வளவு லகுவாகவா ஒரு விவேகி நிர்தேசிப்பர்?

39. மேலே (தயாபாத்ரம்) என்று சொல்ல வேண்டியிருக்கையில் அது கூடுவதற்காக (ராமாநுஜ) என்று மொட்டையாக நிறுத்த வேண்டியதாயிற்று என்றெழுதுகிறீர்கள். முதல் பாதத்திலேயே தயாபாத்ரமென்பது கூடவேணுமென்று எங்காவது நிர்ப்பந்தமுண்டா?

acharya.org

க்ளான மஹான்கள் அஸஹ்யுக்களாயும் த்ரோஹிகளாயுமிருந்தால் ஸ்வாமி துருஷ்கபயநோபத்ரவத்தால் ஸ்ரீரங்கத்தைவிட்டு வெளியேயிருந்த காலத்திலே (அபீதிஸ்தவத்தில்) “நிர்ஸ்நரிபுஸம்பவே க்வசந ரங்கமுக்யே விபோ! பரஸ்பரஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய” என்று ஸாதிக்க நேர்ந்திருக்குமா? என்பதனைச் சற்று ஆலோசிக்க மதியில்லையா உங்களுக்கு? ஸ்ரீரங்கவாஸிகள் பரஸ்பர ஹிதைஷிகளென்றும் அவர்களுடைய திருவடி நிழலிலே ஒதுங்கியிருக்கை தமக்குத் தேட்டமென்றும் நன்கு காட்டியுள்ள தேசிகரை ஸ்ரீரங்கவாஸிகள் பலவிதத்திலும் ஹிம்ஸித்தார்களென்று கதை தொடுப்பது ஸ்வாமிக்கே அவத்யாவஹமென்று தெரிந்துகொள்ள முடியவில்லையா?

36. பரமபாபரர்களும் ஜுகுப்ஸிக்கும்படியான கதைகளைத் தொடுத்ததோடு நில்லாமல் “ஹந்தஹந்த! ராமக்ருஷ்ண ப்ரஹ்ருஷிதாயிநாம் கிந்து சித்ரமத்ர சைத்யராவணாநுகாரிணாம்” என்றிப்படி மிலேச்சபாஷிதங்களைப் பரமஸாத்விகர்களின் திருவாக்காக எழுதிவைத்து ஸ்வகோஷ்டிகளில் கோஷிப்பதும், நால்வர் பதின்மர் திரளுமிடங்களிலே இந்த சுலோகத்தைச் சொல்லிக் கண்ணீரைப் பெருக்கி “ஐயோ! ராவணனையும் சிசுபாலனையுமொத்த தென்கலையார்கள் நம்ம தேசிகனுக்கு இழைத்த இன்னல்களைப் பேசினால் ஒரு மஹாபாரதமாகுமே!” என்று சொல்லி விக்கி விக்கியழுவதும், நீங்களும் அழுங்கோளென்று சொல்லிப் பிறரையும் அழச்செய்வதும், நீதிமன்றங்களிலும்கூடக் கண்ணீர் பெருக்குவதுமாகப் போதுபோக்கிவரும் ஓர் அட்வகேட்டுதான் உண்மையான பக்தரென்று அறிந்துகொள்வீர்களா?

37. ஒரு மருமம் கேளீர். ஒரு மஹாசார்யரைப் பார்த்து ‘உம்மைப் பாதரக்ஷையால் ப்ரஹரிக்கிறேன்’ என்று சொல்லுவதும் ‘எங்களாசார்யரைச் சில பாபிகள் ப்ரஹரித்தார்க’ளென்று பறை சாற்றுவதும் இரண்டும் துல்யபாபமேயென்றும் தெரிந்துகொள்ளவில்லையா நீங்கள்? தேசிகரை ஸ்ரீரங்கவாஸிகள் அப்படி பரிபவப்படுத்தினார்கள், இப்படி பரிபவப்படுத்தினார்கள் என்று எழுதிவைப்பதற்கும் பேதமட்ட பாதகமில்லையோ? உண்மையில் இப்படிப்பட்ட பரிபவங்கள் தேசிகருக்கு விபவத்தில் ப்ராப்தமாயிருந்தால் அப்போது பிறந்திருந்த நீங்களே அந்தப் பரிபவங்களை இழைத்திருப்பீர்களென்பதில் ஸந்தேஹமில்லை. தேசிகரை இப்போது பரிபவிப்பவர்கள் நீங்களேயென்பது ப்ரத்யக்ஷமாயிருப்பதால் இதைக்கொண்டு அதை நிச்சயிக்கத் தட்டுண்டோ? பொய்யும் புளுகும் பொதிந்த பேய்க்கதைகளைக் கட்டிப் பிரசாரம் செய்துவருவதோடு நில்லாமல் பொய்யான தனியன் வாழிகளையும் கட்டி கோஷித்துப் பரிபவமடைவித்து வருகிறீர்களா இல்லையா?

38. ஸ்ரீசைலேசதயாபாத்ரம் — ராமாநுஜதயாபாத்ரம் என்னுமிந்த இரண்டு சுலோகங்களையும் பார்க்கும்போது இரண்டும் ஒரே சாயலாக இல்லையா? தேசிகர்க்கு ஸ்ரீமந்வேங்கடநாதார்ய தனியன்தான் முற்பட்டதென்று ஒப்புக்கொள்ளுகிறீர்கள். அது எவ்வளவு கம்பீரமான சுலோகமென்பதை ஒவ்வொருவருடைய உள்ளமும் அறியுமல்லவா? இங்கிருந்து ராமாநுஜதயாபாத்ரமென்னும்போது ராமாநுஜரென்றும் ஸ்வாசார்யரான ஆத்ரேய ராமாநுஜாசார்யரான கிடாம்பியப்புள்ளாரைச் சொல்லுகிறதென்றும் எழுதுகிறீர்கள்; அப்புள்ளாரையாவது சொல்லட்டும், ஒன்றுமில்லை பகவத்ராமாநுஜரையாவது சொல்லட்டும், அதில் விவாதப்படுவாரில்லை. ஸ்ரீராமாநுஜ என்றோ ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய என்றோ, சொல்லாமல் மொட்டையாக (ராமாநுஜ) என்றிட்டு ஒரு ப்ராஜ்ஞர் தனியனியற்றுவரா? என்று இவ்வளவுகூட ஆலோசிக்க மாட்டீர்களா? மஹநீயரான ஒரு ஆசார்யரை (ராமாநுஜ) என்று இவ்வளவு லகுவாகவா ஒரு விவேகி நிர்தேசிப்பர்?

39. மேலே (தயாபாத்ரம்) என்று சொல்ல வேண்டியிருக்கையால் அது கூடுவதற்காக (ராமாநுஜ) என்று மொட்டையாக நிறுத்த வேண்டியதாயிற்று என்று சொல்லுவதும் ஒரு பக்ஷம். முதல் பாதத்திலேயே தயாபாத்ரமென்பது கூடவேண்டுமென்று என்ன நிர்ப்பந்தமையா?

acharya.org

தயாபாத்ர மென்பதற்குத்தான் என்ன ஆவச்யகதை? ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய ஸ்ரீ பாதாப்ஜமது வ்ரத: என்றோ, ஸ்ரீராமாநுஜ யதீந்த்ர பாதபங்கேருஹாச்ரிதம் என்றோ கௌரவம் குன்றாமல் தனியனியற்றும் வழிகள் எத்தனையில்லை? ராமாநுஜ நாமத்திற்கு முன்பும் பின்பும் கௌரவச் சொல் ஏதும் சேர்க்காமல் மொட்டை நாமமிட்டுத் தனியனியற்ற என்ன ஆவச்யகதை?

40. தயாபாத்ரம் என்பதைச் சேர்க்க வேண்டிய அவசியமிருந்ததென்றாலும் ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய தயாபாத்ரம் தயாநிதிம்—ஆத்ரேய ஸ்ரீமதாசார்ய தயாபாத்ரம் மஹா குரும் என்றிப்படி கலோகம் கட்டும் வழிகள் எத்தனையில்லை? தேசிகரைப் பெருமைப்படுத்துவது போல அவருடைய ஆசார்யரையும் பெருமைப்படுத்த வேண்டியது மிகமிக ஆவச்யகமல்லவா? வெறுமனே (ராமாநுஜர்) என்பது 'அஸத்க்ருதமவஜ்ஞாதம்' என்ற கீதையின்படி அவமரியாதையான சொல் என்பதுகூடவா உங்களுக்குத் தெரியவில்லை. ஆக (ராமாநுஜதயா பாத்ரம்) என்ற சொற்றொடர் மற்ற கவிதைகளைப்போலே இயற்கையாகத் தோன்றினதன்று என்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா இல்லையா?

41. தனியன்களனுஸந்திக்க வேண்டிய ப்ரகரணங்கள் ஒன்றிரண்டல்ல; பலவுண்டு ஸமாச்ரயண பரம்பரைத்தனியன், ஸ்ரீபாஷ்ய பரம்பரைத்தனியன், பகவத்விஷய பரம்பரைத் தனியன், ரஹஸ்ய பரம்பரைத்தனியன்...என்றிப்படி அனேக கட்டங்களுண்டென்பதை அறிவீர்களன்றோ. தென்கலையார் மணவாளமாமுனிகளின் தனியனை யநுஸந்திக்கவேண்டும் போது எந்த பரம்பரையிலும் ஸ்ரீசைலேசதயாபாத்ரமென்னும் தனியன் தவிர வேறொன்றறியார்கள். நீங்கள் கோயில் சண்டை ப்ரகரணமொன்று தவிர மற்று எந்த ப்ரகரணத்திலும் ராமாநுஜதயா பாத்ரத்தை அறியமாட்டீர்கள் என்கிறவிது உண்மையா அன்றா

42. 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்று தொடங்கி 'ப்ரதம்ஸரச்சமஹதாஹ்வய' என்பதீறாக வுள்ள பொதுத் தனியன்களைத் தென்கலையார்கள் அருளிச்செயல் ஸேவையிற் போலவே எந்த காலக்ஷேப கட்டத்திலும் உபக்ரமத்தில் சொல்லியே வருகிறார்கள். இவற்றை நீங்கள் கோயில் சண்டை கட்டத்தில் மட்டுந்தானே வேறு கதியின்றிச் சொல்லி வருகிறீர்கள். இந்தத் தனியன்கள் உங்களுக்கு எப்படி ப்ராப்தமாயிற்றென்று கேட்டால் வாய்திறக்க வழியுண்டோ? உடையவர் தனியனான (யோநித்ய மச்யுத) ச்லோகமும், நம்மாழ்வார் தனியனான (மாதா பிதா யுவதய:) ச்லோகமும் உங்களுக்கு எந்த பரம்பரையிலாவது அநுஸந்தானத்தில் வருகிறதோ? தனியன் அநுஸந்திப்பதென்கிற ஒரு க்ரமத்தை ஏற்படுத்திக் கொண்ட காலத்தில் நமக்கு எல்லாம் தேசிகனிட்ட ச்லோகங்களாகவே யிருக்கவேணுமென்று கொண்டு யதிராஜஸப்ததியின் உபக்ரமத்திலுள்ள (கமலாநாதம் குரும் வந்தே) இத்யாதி ச்லோகங்களையே கொண்டீர்கள் இது அஸமஞ்ஜஸம் என்றாவது அநீதியென்றாவது சொல்ல வரவில்லோம். யோநித்யமச்யுத ஸ்தானத்தில் ப்ரஜ்ஞாம் லக்ஷ்மணமுநி: மாதாபிதா யுவதயஸ் ஸ்தானத்தில் யஸ்யஸாரஸ்வதமும் உங்களுக்கு ருசியிலே மட்டும் அவற்றை விட்டு வேறு தனியன்களைக் கொள்வதற்கு என்ன ப்ரஸக்தி. ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தைவிட்டு வேறு ஸ்ருஷ்டி செய்துகொண்ட நீங்கள் (லக்ஷ்மீநாதேத்யாதி ப்ரணதோஸ்மி நித்யமளவும்) தென்கலை ஸம்பிரதாய ஸரணியையே தழுவுவதற்கு ஏற்ற காரணமியம்புவீர்களா?

43. "எங்களுக்கு எதிரிகளிடத்தில் விரோதம் தோன்றவில்லையோ அதையெல்லாம் விடாமல் எடுத்துக்கொண்டோ" மெனின்; உத்தரசாத்திரியில் ஸர்வதேச தசாகாலேஷு தொடங்கி "ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாம நுதிநம் ஸம்வர்த்தய" என்னுமளவும் ஸர்வாத்மநா உங்களுக்குத் தலைவேதனையாயிருந்தும் அதை விடாதேயிருப்பது அசட்டுத்தனத்தின் எல்லைநிலமல்லவா? உங்களைப் புறம்புபடுத்தியே அவதரித்த ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞைக்கு மங்களாசாஸனம் பண்ணுவதும், அதை கோஷிக்கிறதிருந்தே யொன்றாலும் என்றுதோன்றுமல் அது உங்களுக்கு

acharya.org

ஏவ்வளவோ லஜ்ஜாவஹமல்லவா? "வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே" என்கிற திருமாலைப் பாசுரம் உங்களுக்கு நினைவுக்கு வராமற்போகுமா?

44. ஸர்வதேசேத்யாதி ச்லோக த்வயத்தில் ஸ்ரீரங்கப்ரஸ்தாவமில்லையாயினும் அடுத்ததான 'ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம் ஸம்வர்த்தய' என்று இருமுறை அநுஸந்திக்கப்பட்டுவரும் ஸூக்திரத்தினமானது விசேஷித்து ஸ்ரீரங்கஸ்ரீஸம்ருத்திக்கேயன்றோ மங்களாசாஸனம் செய்வது ஸ்ரீரங்கத்தில் ப்ராகார கோபுரமண்டபாதிகள் திருமங்கையாழ்வார் நிர்மாணம் செய்வித்தவை. இதை யாரும் மறுக்கவொண்ணாதபடி பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் *ஜிதபாஹ்ய ஜிநாதிமணிப்ரதிமா அபி வைதிகயந்நிவ ரங்கபுரே, மணிமண்டப வப்ரகணந் விததே பரகாலகவி:* என்று சிலாசாஸநம் போன்ற ச்லோகமிட்டருளியிருக்கிறார். அப்படிப்பட்ட ப்ராகார கோபுர மண்டபங்களிலும் மற்றும் ராய கோபுரமென்று வழங்கப்படுகிற அதிலும் பல்லாயிரம் வருஷங்களுக்கு மேற்பட்டவையென்று ஒவ்வொருவரும் மதிக்கக்கூடிய திருமண் காப்புகள் திகழ்கின்றன. காரைக் கட்டிடமாக இருப்பவற்றை விட்டுவிடுங்கள். கருங்கல் கம்பங்களிலும், கருங்கல் உத்திரங்களிலும் பள்ளமாகச் செதுக்கப்படாமல் மேடாகத் திருப்பணி செய்யப்பட்ட திருமண் காப்புகள் பலபல திகழ்வதைக் காண்கிறீர்களல்லவா? முராரி நாடகத்தில் (அநர்க்கராகவத்தில்)*வ்யாமக்ராஹ்ய ஸ்தநீபி:* என்று சொல்லப்படுவது போல் வ்யாமக்ராஹ்யமென்னவுமொண்ணாதபடி மிகமிக ஸ்தூலங்களாயிருக்கிற தூண்களில் பள்ளமாகவல்லாமல் மேடாகக் காணப்படும் திருமண்காப்புகளைக் கண்டால் அந்தத் தூண்கள் திருப்பணி செய்யும் போதே இத்திருமண்களும் அமைந்தவையென்று நீங்களும் இசைந்தேதீரவேண்டியிருக்கிறது. இப்படி ஸ்ரீரங்கத்தில் மாத்திரமல்ல. திருவனந்தசயனம், ஸ்ரீ ஜகன்னாதம், ஸ்ரீ கூர்மம், ஸிம்ஹாசலம் முதலான பலவிடங்களிலும் அற்புதமாகக் காண்கிறீர்கள். இவற்றால், நம்பூர்வாசாரியர்கள் யாவரும் ஒரேவிதமான திருமண்காப்பைத்தான் ஆதரித்து வந்தார்களென்பது உங்களாலும் நிஷ்பக்ஷபாதமாக இசையப்பட வேண்டியதாகிறது. கி.பி. பத்தொன்பதாவது நூற்றாண்டில் வடகலையாக்கப்பட்ட சில கோவில்களிலும் கூட புராதனமான சிலாமயங்களான தென்கலைத் திருமண்காப்புகள் இன்னமும் அழிக்கமுடியாமல் பலவுள்ளன. அதெல்லாம் கிடக்கட்டுமையா! ஸ்ரீரங்க ஸ்ரீயானது அநுதினமும் அநுபத்ரவமாக விளங்கிவரவேணுமென்று ஆசாஸிப்பதற்கு நீங்கள் அதிகாரிகளா?

45. ஸ்ரீரங்கத்தில் எவ்விதமான குறும்பும் செய்யாத—செய்ய நினையாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்திக்கவேண்டிய ஸ்ரீஸூக்தியல்லவா ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதினம் ஸம்வர்த்தய என்பது. ஆசீவிஷவர்க்கங்கள் பெரிய திருவடிக்குப் பல்லாண்டு பாடுவதென்பது எங்கேனுமுண்டா? இந்த ஸ்ரீஸூக்தியானது "அரங்கநகர் வாழ" என்கிற தமிழ் வாக்கியம் போலல்லாமல் சிறிது விசேஷத்தோடு கூடியிருப்பதை நோக்கினீர்களா? "ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியம் அநுதினம் ஸம்வர்த்தய" என்னுமளவே சொல்லப்போதுமாயிருக்க இடையில் அநுபத்ரவாம் என்று சேர்த்திருப்பதை நோக்கினீர்களா? திருவரங்கத்திற்குப் ப்ரபலமான உபத்ரவங்கள் நேர்ந்து கொண்டிருந்ததற்கு அபிநிவேசமொன்றே ஸாக்ஷியாகப் போரும். ஸ்தல விசேஷங்களுக்கு உபத்ரவங்கள் ஸமயபேதந பலவகைப்பட்டிருக்கும். பூருவாசாரியர்களின் காலத்தில் நேர்ந்த உபத்ரவங்கள் ஒருவிதம். அவை கழிந்த பின்பும் நேர்ந்த உபத்ரவங்கள் நீதி மன்றங்களறிந்தவையல்லவா? இன்னமும் உபத்ரவங்களை விளைவிக்க வேணுமென்னுமெண்ணமே அல்லும்பகலும் உள்ளத்தில் ஊடாடிநிற்க, "ஸ்ரீரங்கச்ரியம் அநுபத்ரவாம அநுதிநம் ஸம்வர்த்தய" என்பவர்கள் 'சோரநீயா:' என்கிற வகுப்பிலல்லவா சேர்ந்தவர்கள். நீங்களும் இந்த வகுப்பில்தான் சேர்ந்திருக்கிறீர்களோ?

46 ஸ்ரீ ராமாநுஜரும் கூரத்தாழ்வானும் சேர்ந்து ஸ்ரீரங்கத்தில் சேதனவர்க்கத்திலும் அசேதனவர்க்கத்திலுமிருந்த வடகலைப் புண்ட்ரங்களையெல்லாம் தென்கலைப் புண்ட்ரமாக

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

※மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடுநாள் ※ என்னும்படியவதரித்தருளின எம்பெருமானார் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான எந்த திவ்யதேசங்களிலும் தடையும் சங்கையுமின்றிக்கே அதிகாரச் செல்வத்துடனே உள்ளே புகுந்து ஒழிவில் காலமெல்லாம் முன்னாய் மன்னி வழுவிலா வடிமைசெய்து வாழ்ந்தவர். வண்டு சோலைகளிலேயே சுழலமிடும்; எம்பெருமானார் தாமும் ※ ஆராமஞ் சூழ்ந்தவரங்கம் ※ சிந்து பூ மகிழும் திருவேங்கடம் ※ ※ விரையார்பொழில் வேங்கடம் ※ என்னும்படியாகச் சோலைகள் மிக்க தலங்களிலேயே சுழலமிட்டவர். இப்படி மற்றும் பல பொருத்தங்களும் காண்க

20 வண்டுக்கு த்விரேப மென்று பெயர்; இரண்டு ரேபங்களை உடையது என்றபடி. ரேபமாவது ரகரம்; வண்டுக்கு வாசகமான (ப்ரமர சப்தத்தில் இரண்டு ரேபமிருப்பதால் இது பற்றியே வண்டு) த்விரேபமெனப் பட்டது ஸ்ரீராமாநுஜராகிற வண்டானது தன்னிடத்தில் இரண்டு ரேபமில்லையேயென்கிற குறையைத் தீர்த்துக் கொள்வதற்காகவே வரவர முனிகளாக மற்றோரவதாரம் செய்தருளினபடி ராமாநுஜத் திருநாமத்தில் ஒரு ரேபமேயாய், வரவர முனி திருநாமத்தில் இரண்டு ரேபமிருக்கும்படி கண்டுகொள்வது. ... ...

Released by Maran's Dog ,Toronto, Canada

If un-delivered please return to:

P. B. ANNANGARACHARYA,
Kanchipuram. Pin Code-631503.

To
Sriman

Nanguneri
(Tinnevelly dt)

Edited and Published by P. B. Annangaracharya Swami
and Printed by E. Devarajan at Sri Kamakshi Press,
No. 44-c, Thirukatchinambi Street, Kancheepuram-631503.

Released by Maran's Dog ,Toronto, Canada

50. ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய தனியனில் சில குறைகள் கண்டு ராமாநுஜதயாபாத்ரத்தனியன் செய்யப்பட்டதாகச் சொல்லி வருவதோடு நில்லாமல் எழுதியும் வைத்திருப்பவர்கள் இந்த நமோ ராமாநுஜார்யாய தனியனைப் பற்றியும் அவசியம் பேச வேண்டுமே. D. T. T. ஸ்வாமிக்கு இதை தேசிக க்ருதமாக எழுதத் துணிவு பிறக்கவில்லை. அப்பாசார்ய க்ருதம், குப்பாசார்ய க்ருதம்................என்றெழுதிவைக்கவும் கைவரவில்லை. கோவிற் சண்டைகளைக் கிளப்பின காலத்தில் சில அய்யப தேச்யர்கள் போட்டிக்காக எழுதிவைத்த தென்னுமுண்மையே ஸ்திரீ க்ருதமாயிற்று. அப்புள்ளாரும் தேசிகனும் ஜீவித்திருந்த காலம் வரையில் இந்த ச்லோகம் தலைகாட்டிற்றில்லை யென்பது சிலாலிகிதம். பிறகு எப்போது தோன்றிற்று? இதற்குக் கர்த்தா யார்? என்கிற விசாரத்தை ப்ராமாணிகர்களனைவரும் செய்யக் கடமைபபட்டவர்கள். இதெல்லாம் தக்க சான்றுகளுடன் நீங்கள் செய்து உண்மையைக் காட்டுவீர்களா? அல்லது பல்லைக் காட்டுவீர்களா?

51. அக்காலத்தில் ப்ரதிவாதி பயங்கராசார்யரும், சிறிது பிற்காலத்தில் சோளஸிம்ஹபுரம் தொட்டயாசார்யரும் வேதாந்தவாசிரியரிடத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர்களென்பதை நீங்களும் இசைகின்றீர்கள். அவ்விருவருடையவும் ஸந்ததி பரம்பரை அநுஸ்யூதமாக வந்து கொண்டிருப்பது ப்ரஸித்தம். ஸ்வாமி தொட்டயாசார்யருடைய ஸந்ததி சோளஸிம்ஹபுரத்தில் விச்ராந்தம். ப்ரதிவாதி பயங்கராசார்யருடைய ஸந்ததி நாற்றிசையிலும் பெரும்பாலும் பரவியுள்ளது. இவ்விரு ஸந்ததிகளிலும் வேதாந்தாசார்யரென்கிற நாமகரணம் வைஷம்யம் முற்றின இக்காலத்திலும் மாறாமல் அநுவர்த்தித்து வருகிறது. இவர்களுடைய குடும்பங்களில் வேதாந்தாசார்ய விக்ரஹாராதனமுமுள்ளது. திருவிந்தளூர் முதலான தென்னாட்டுத் திருப்பதிகளில் வாழும் பிரதிவாதிபயங்கர வம்சஸ்தர்கள தங்கள் பரம்பரையில் நயனாசார்ய நாமகரணமும் செய்துவருகிறார்கள். இவர்கள் பரிமள ரங்கநாதன் ஸன்னதியில் வேதாந்தவாசிரியனுக்கு விக்ரஹ ப்ரதிஷ்டை செய்வித்து உத்ஸவ பரிபாலநாதிகளை இற்றைக்கும் ஒழுங்காய் நிர்வஹித்துவருகிறார்கள். உங்களுக்கு அந்த தேவஸ்தானத்தில் பிரவேசம் இல்லாமையினாலே பாஹ்ய ஸ்தலத்தில் புதிதாக ஆலய நிர்மாணம் செய்வித்துச் சில வருஷகாலமாய்த் தனியான வழிபாடு நடத்தி வருகிறீர்கள். திவ்யதேசத் தெம்பெருமானுடைய ப்ரஸாத ஸம்மானங்களைப் பெற்று ஆனந்தமாக வாழ்கின்ற ஆசார்யனுடைய முன்னிலையில் இப்படியொரு தனிக்கூத்து நடத்த வேணுமென்று தோன்றினது எதனாலோ தெரியவில்லையே. இக்கூத்து ஒன்றிரண்டு ஸ்தலங்களிலன்றே. இதிலிருந்து எவ்வளவு மர்மங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் தெரியுமோ?

52. உங்களால் ஆக்ரமிக்கப்பட்ட சில திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருந்த மணவாள மாமுனிகளை உத்வாஸனம் செய்தீர்கள்; சில திவ்ய தேசங்களில் உத்வாஸனம் செய்ய மனமில்லாமல் ஆளவந்தாராக ஆக்கினீர்கள். அறவே உத்வாஸனம் செய்ததுதான் அதிகம். இது உங்கள் நிலை. உங்களுக்கு அற்பப்ரவேசமுமில்லாத தென்கலை திவ்ய தேசங்களில் ப்ரதிஷ்டிதராயுள்ள தேசிகரை உத்வாஸனம் செய்தால் கேட்பாரில்லை யென்பது நீங்களறியாததன்று. கீழே ப்ரஸ்தாவித்த திருவிந்தளூரிலோ, ஸந்நிஹிதமான ஸ்ரீபெரும்பூதூரிலோ, திருவல்லிக்கேணியிலோ மாத்ஸர்யம் முற்றின இக்காலத்திலுங்கூட மற்ற ஆசாரியர்களோடொப்ப தேசிகருக்கு உத்ஸவ பரிபாலநாதிகளைக் குறையற நடத்தி வருவதைக் காணக் கண்ணில்லையே உங்களுக்கு?

53. 'நம்மதேசிகனுக்குத் தென்கலைத் திருமணிட்டு ஸ்ரீசைலதயாபாத்ரம் சொல்லிப் பண்ணுகிற உத்ஸவம் உத்ஸவத்தில் சேர்ந்ததா என்ன?' என்று உறுமுகிறவர்கள் ஸ்ரீரங்கத்தில் 'நம்ம தேசிகனு'க்கு ஒருக்ஷணம் வடகலைத் திருமணிட்டு வெளிக்கிளப்பினதற்காக ஆயிரம் ரூபா சொளசொள வென்று அபராதம் செலுத்தி மூன்று கோர்ட்டு வரையில் அதை ஸ்திரப்படுத்திக்

acharya.org

கொண்டார்கள் "எனக்கு பர்த்தாவோடு வாழ்க்கை வேண்டாம்; வாழாவெட்டியாகவே காலங்கழிக்கிறேன்" என்று ஒதுங்கி வர்த்திக்கும் பதிமணிகளோடொப்ப, வாசற்கொடுங்கையில் பேர்க்கவும் பேராத தென்கலைத் திருமண் காப்புடனே, சததூஷணியில் அறுபத்தைந்தாவது வாதத்தின் முடிவில் "ஸ்த்ரீ தர்மிண்யாம் ஆத்மஜநந்யாமிவ" [ரஜஸ்வலையான தாயினிடத்திற் போல] என்று தாம் காட்டின த்ருஷ்டாந்த தசையைத் தம்முடைய பரிஸ்திதியினால் தாமநுபவித்துக் காட்டி வருகிற வைபவம் வாசாமகோசரமென்று தெரிந்து கொள்ளும்படி ஒரு ஸதஸ்ஸில் உபந்யஸிப்பீர்களா!

54. சாஸ்த்ரஜ்ஞர்கள் சில விஷயங்களை 'தர்மிக்ராஹகமாநஸித்தம்' என்பர்கள்: அந்த ரீதியில் தேசிகருக்கு ஸ்ரீசைலேசதயா பாத்ரமும் அதைச் சேர்ந்த வாழிகளும் தர்மிக்ராஹகமாநஸித்தம் என்று திருப்புட்குழி யப்பாஸ்வாமி யென்கிற நையாயிகாக்ரேஸரர் ஸாதித்துக் கொண்டிருப்பராம்: இது கேள்வியுண்டா இல்லையா? இல்லையென்று கூறினால் ஒரு வினாவுக்காவது விடை கூறினதாகுமே.

55. காஞ்சீபுரம் ஸ்வாமியினுடைய நூல்களுக்கு மறுப்பெழுதுவதாக எழுந்து சில ஏடுகளெழுதி அடுத்த க்ஷணத்தில் ப்ரத்யாக்யாநம் பெற்று விச்ராந்தி யடைந்த பண்டிதர்களுக்கெல்லாம் விருதுகள் கொடுப்பதாக முன்வந்த பெரியார்கள் சிலர்க்கு தேசிகதர்சன ஜயத்வஜமென்றும், சிலர்க்கு தேசிகதர்சன திவாதீபமென்றும், சிலர்க்கு தேசிகதர்சன சக்ரவர்த்தியென்றும் இப்படி விருதுகள் அளித்திருக்கிறார்களல்லவா? இங்ஙனே விருதுகள் பெற்ற புலிகளும் சிங்கங்களும் மேல்விளைவறியாதே எழுதி வைத்த சுவடிகள் பெரும்பாலும் மறைந்தொழிந்தாலும் அவரவர்கள் ஸ்வகோஷ்டிகளில் 'இதோ நானெழுதியிருப்பது பாரும், இதோ நம்முடைய பதிலுரையை வாசித்துப் பாரும்' என்று மூடிமூடிக் காட்டி வாங்கி வைத்துக் கொள்வதுண்டே: அந்தமைய [ரப்பர் பரம்புகளென்னப்பட்ட] சுவடிகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவற்றிலுள்ள சில விஷயங்களை ப்ரஸ்தாவிக்கிறேன்; சிரிக்காமல் கேட்கிறீர்களா? பிரபந்தஸார விஷயந்தான்.

56 ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை அருளிச் செயலென்றும் திவ்ய ப்ரபந்தமென்றும் வழங்காமல் ப்ரபந்தமென வழங்குவது திவ்ய ப்ரபந்த தூரஸ்தர்களான ஸ்மார்த்தர்களின் திரளிலே தோன்றியது. அது பிறகு ஸாமானியர்களான வைஷ்ணவர்களின் வாக்கிலும் புகுந்தது. பூர்வாசாரியர்கள், விசிஷ்ய நிகமாந்த மஹாகுரு பிரபந்தமென்று ஒருவர் சொல்லக் காதால் கேட்டாலும் மாய்ந்து போவரே. இக்காலத்திலொருவர் தம்முடைய திவ்யப்ரபந்த த்வேஷத்திற்கும், பூர்வாசார்ய வித்வேஷத்திற்கும் சாக்ஷியாக ஜபந்வஜமாக ப்ரபந்தஸாரமென்று எழுதி வரும்படியான அவத்யம் தேசிகனிடத்தில் ஏறுமா; எங்ஙனேயேறும்! நூல்களில் பொது நிர்தேசமென்றும் சிறப்பு நிர்தேசமென்றும் இரண்டுண்டு: திவ்யப்ரபந்த வியாக்கியானங்களில் கீழ்ப்ரபந்தத்தால் என்றும் இப்பிரபந்தத்தில் என்றும் அருளிச் செய்வதுண்டு. அது கொண்டு "பூருவர்களும் ப்ரபந்தமென்பதுண்டு" என்று காட்ட வருவது அபஹாஸ்யமாகும். ஸ்வாமி ஸ்தோத்ர பாஷ்யத்தில் "மாதாபிதாயுவதய:" வியாக்கியாந-உபக்ரமத்தில் "பராசரப்ரபந்தாதபி" "உபஜீவ்யப்ரபந்த நிர்மாணக்ரமாத்" என்று ஸாதித்துள்ளார். அது கொண்டு ஸ்ரீ விஷ்ணு புராணத்தை ப்ரபந்தமென்பதுண்டோ? "பாஷ்ய ப்ரபந்தே" "ச்ருதப்ரகாசிகாப்ரபந்தே" இத்யாதி பரச்சத ப்ரயோகங்களுண்டு. அருளிச்செயலை விவக்ஷித்து ப்ரபந்தமென்று வழங்குவது நவீனர்களிடத்தன்றிப் பூருவர்களிடத்து எங்குங்காண முடியாது காணமுடியுமென்றால் எடுத்துக் காட்டுவீர்களா? இந்தவொன்றுக்காவது ப்ரயாஸங்கொள்ளுவீர்களா?

57. தேசிகர் செய்தருளின குருபரம்பராஸாரத்தில் ஆளவந்தார் முதலான ஆசார்யர்களின் ப்ரஸ்தாவத்தில் 'இவரருளிச் செய்த ப்ரபந்தங்கள்' என்று அருளிச் செய்தருளிச் ஸாதிக்கிறார். எம்

acharya.org

பெருமானார் ப்ரஸ்தாவத்தில் "திருவாய்மொழி யோதினர்" "திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினர்" என்றே ஸாதித்திருப்பதைக் காணீர். இப்படிப்பட்ட மஹாசார்யர் ப்ரபந்தஸார மென்று பெயரிட்டு ஒரு ப்ரபந்தம் பண்ணினரென்கை அநுபவிக்கவும் தகாததேயென்று தெரிந்துகொண்டீர்களா?

58. இது வெளிவ்யவஹாரங்களோடு நின்றாலும் பாதகமில்லை. "வேதாந்த குரு மொழிந்த ப்ரபந்தஸாரம்" என்று நூலினுள்ளது நுழைந்திருப்பது மிகவும் அருவருக்கத் தக்கதன்றே. எந்த ப்ரபந்தத்தின் எந்த விதமான ஸாரம் இதில் எந்த பாட்டில் பொதிந்திருப்பதென்று கேட்டாலோ வர்ஷசதமானாலும் விடையிறுக்க முடியாது. ஸ்வாமி ரஹஸ்யத்ரய ஸாரமென்றும், த்ரமிடோபநிஷத்ஸாரமென்றும் சில ப்ரபந்தங்கள் ஸாதித்திருக்கிறாரே, இவற்றில் ஏதேனும் கேள்வி பிறப்பதுண்டோ? ரஹஸ்யத்ரயத்தின் ஸாரப் பொருள்களைக் கொண்டது ரஹஸ்யத்ரயஸாரம், அந்த ஸாரக்ரந்தத்தின் ஸாரம் கொண்டது ஸாரஸாரம். த்ரமிடோபநிஷத்தான திருவாய்மொழியின் ஸாரங்கொண்டது த்ரமிடோபநிஷத்ஸாரம். மற்றும் அருளாளப் பெருமாளெம்பெருமானார் நடாதூரம்மாள் முதலானோருடைய ஞானஸாரம் ப்ரமேயஸாரம் தத்வஸாரம் முதலிய க்ரந்தங்களின் திருநாமங்களிலும் விசாரம் தோன்ற ப்ரஸக்தியே கிடையாது. திவ்ய ப்ரபந்தார்த்த விசாரலேசமுமற்ற சுவடிக்கு ப்ரபந்தஸார மென்று அந்தோ மஹா விவேகியான தேசிகரா பெயரிடுவர்? இதைப்பற்றி வாய்திறப்பீர்களா!

59. "ப்ரபந்தங்களின் ஸாரமான வகை தொகைகளை வெளியிடும் நூலாகையாலே ப்ரபந்த ஸாரமெனப் பெயரிட்டிருக்கலாம்" என்று சோதிடம் சொல்லுமாபோலே எழுதி வைத்திருக் திருக்கிறாரொருவர். சாரீரக மீமாம்ஸையில் இத்தனை அத்யாயங்கள் இத்தனை பாதங்கள் இத்தனை ஸூத்ரங்கள் இத்தனை அதிகரணங்கள், இதை இன்னார் இயற்றினார் என்று இவ்வளவே விவரித்து ஒருவர் ஒரு நூலெழுதினால் அதற்கு சாரீரகஸாரமென்று பெயரிடலாம் போலும். "பெயரிட்டிருக்கலாம்" என்றெழுதுகின்றமையால் எழுதினவருடைய நெஞ்சுக்கே குழப்பம் தீரவில்லை யென்பது விளங்கவில்லையா!

60. அச்சுவடியில் முதற்பாட்டைப் பாருங்கள்? "ஆழ்வார்களவதரித்த நாளூர் திங்கள்" என்பது தொடக்கம். [நாள் ஊர் திங்கள்] நாளென்பது நக்ஷத்திரம்; ஊரென்பது தெரிந்ததே; திங்களென்பது மாஸம். ஊரை முன்னேயோ பின்னேயோ எங்கும் வைக்கலாம். மாஸ நக்ஷத்திரங்களை மாற்றுவதுமா? இன்ன மாஸத்தில் இன்ன நக்ஷத்திரத்தில் என்பது தானே முறைவு; "ஆழ்வார்களவதரித்த ஊர் திங்கள் நாள்" என்றே "திங்கள் நாளூர்" என்றே சொல்லுவதில் யாப்புச் சிதைவு எள்ளளவும் நேராது. கந்யாமாஸே, விச்வாவஸு நாம ஸம்வத்ஸரே தசம்யாம் திநே உத்தராயணே சுக்லபக்ஷே என்று சொல்லுவது எங்கேனும் கண்டதுண்டோ? இந்நேர்த்திக்கு செய்யுள் கூடாவிட்டாலும் பிரமப்படுக்கப்படுவர்கள் சிறிய ஞானத்தர்களும்; எளிதாகவே கூடுவதாயிருக்க விபரீதமாகப் பாடினரென்னு மவத்யத்தை தேசிகர் திருமுடி மேலா ஏற்றுவது? இப்படியும் ஒரு வீண்பிடிவாதமா?

61. விவாத நூலில் *வையகமென்* என்கிற பதினேழாம் பாட்டு மிகவும் பிற்பட்டது. ஒருவர் செய்து முடித்த பிறகு மற்றொருவர் செய்து நுழைத்ததென்பதில் ஐயமுண்டோ? இப்பாட்டில் ஆழ்வார்கள் பன்னிருவரையும் பேசி முடித்தபின் "எதிராசர் தம்மோடு ஆறிருவர் ஓரொருவர் அவர் தாம் செய்த...நாலாயிரமும்" என்றுள்ளது. இதனால் இராமாநுச நூற்றந்தாதியை இராமாநுசர் தாமே செய்தருளியதாக நிஸ்ஸந்தேஹமாய்க் கூறப்பட்டதாயிற்று. இதற்கு இப்படி பொருளல்லவென்றும், இராமாநுசர் செய்வித்தநூலென்று பொருள் கொள்ளலாமென்றும் வேறுவிதமாகவும் கொள்ளலாமென்றும் நவீனவுரைகாரர்கள் சிரமப்

acharya.org

படுகிறீர்கள். அது '.....வ்ருதா ச்ரம:' அத்தனை. 'இராமானுசர் இயற்றினபடியாலே இராமானுச நூற்றந்தாதி யெனப் பெயர் வந்தது என்று மருண்டவொருவர் செய்த செய்யுளிது, 'பர்த்ருஹரி: பட்டிகாவ்யம். பாரவி, முராரி, மாகம் இத்யாதியாக வழங்கும் க்ரந்தநாமங்கள் ப்ரமஹேதுவாயின. தேசிக ப்ரபந்தமென்றால் தேசிகரியற்றிய ப்ரபந்த மென்றுதானே பொருள் அப்படியே கொண்டார்களிக்கும் என்பதை எளிதாகத் தெரிந்துகொண்டீர்களா? வேறொரு பதில் சொல்லுகிறீர்களா ?

62. "அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ, சடகோபன் தண்டமிழ் நூல் வாழ" என்னும் வெண்பாவுக்குப் பிரதியாக "நானிலமுந்தான் வாழ நான்மறைகள் தாம்வாழ, மாநகரில் மாறன் மறைவாழ" என்கிற வெண்பா வெளிவந்துளது. மாறன் மறையாகிய திருவாய்மொழி மாநகரில்வாழ என்கிறது இதில். மாநகர் என்பது எது ? திருவாய்மொழியில் "தென்திருப்பேரெயில் மாநகரே" என்றுள்ளதனுல் ஆழ்வார் திருநகரிக்கு ஸமீபத்திலுள்ள தென் திருப்பேரைக்கே மாநகரென்று திருநாமமுண்டு. அவ்விடத்திலா மாறன் மறைவாழ வேணும் ? 'ஸர்வதேச தசாகாலேஷ்வ' என்றாற்போலே உலகமெங்கும் வாழ வென்று ஆசாஸிக்க வேண்டாவா ? ஏற்கனவே *அரங்கநகர்வாழ* என்பது ப்ரஸித்தமாய்விட்டபடியால் அதை ப்ரஸ்தாவிக்க முடியாமற்போனாலும் 'மாநிலத்தில் மாறன்மறை வாழ" என்னலாமே. ஏதோ யொரு நகரை உத்தேசித்துத்தானே 'மாநகரில்' என்கிறீர்கள். அந்நகர் இன்னதென்று பக்தர்கள் தெரிந்துகொள்ள வேண்டாவா ? இப்படியுமா கோட்டை விடுவது?

63. நம் தேசிகன் ஸாதித்த ஸம்ப்ரதாய பரிசுத்தி முதலான ரஹஸ்ய க்ரந்தங்களில் ஆதிமத்யாவஸானங்களில் சுலோகங்களும், பாட்டுகளுமுள்ளன. அந்த சுலோகங்கள் எப்படி தனிப்பட்ட பிரபந்தங்களல்லவோ, அப்படியே அப்பாட்டுக்களும் தனிப் பிரபந்தங்களல்ல வென்பது சிலாஸிகிதம். "அவை தனிப் பிரபந்தங்களாவும் தொன்றுதொட்டு விளங்கி வருகின்றன" என்பது ஹாஸாஸ்பதம் கேவலம். கோயில் சண்டை தோன்றுவதற்கு முன்பு தேசிகரை இன்னுரென்றேயறியாதிருந்த வகுப்பினர் 'தொன்றுதொட்டு' என்பது பாமரவஞ்சனை மட்டுமன்றே. ஆத்மவஞ்சனையுமல்லவா ? என்ன சொல்லுகிறீர்கள் ?

64. இத்தகைய விசாரங்கள் பாசி படர்ந்துவிட்டன. தேசிகர் பெரியவாச்சான் பிள்ளை முதலான ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளைத் தழுவியே ஸாதித்திருப்பவர் என்பதும், சிலவிடங்களிற்காணும் அபிப்ராயபேதங்களும் நிலைநின்றிருக்கவில்லையென்பதும் இனி மூதலிக்கப் படுகிறது. ஸ்தோத்ர ரத்நத்தில் "மம நாத ! யதஸ்தி யோஸ்ம்யஹம்....அதவா கிம் நு ஸமர்ப்பயாமி தே" என்றவிடத்து தேசிக பாஷ்யத்தில்—கீழ் *வபுராதிஷு* என்ற ச்லோகத்தில் *அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:* என்று செய்யப்பட்ட ஆத்ம ஸமர்ப்பணம் அடுத்த *மம நாத !யதஸ்தி* இத்யாதியில் அநுசயமூகேந ப்ரதிக்ஷேபிக்கப்படுவதாய்ச் சில ஆசிரியர்கள் திருவுள்ளம்பற்றுவதாக எடுத்துக்காட்டி மறுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். முன் சுலோகத்தில் செய்த ஆத்ம ஸமர்ப்பணத்தைப்பற்ற அநுசயமென்பது அஸம்பாவிதம் என்றும், தத்விவரணமே இதில் செய்யப்படுகிறதென்றும் இங்கே காட்டப்பட்டது. ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாங்கப்ரபதநாதிகாரத்தில் "இஸ்ஸமர்ப்பணத்தைப்பற்ற அநுசயம் பண்ணிற்றும்" என்கிற ஸ்ரீஸூக்தியாலே அநுசயமென்றே நிர்ணயித்தாராயிற்று. அநுசயமன்றென்றதற்கு அநுசயம் காட்டினபடியல்லவா இது ? இதைப்பற்றி ஏதாவது வாய்திறக்கவல்லீர்களோ முந்தின க்ரந்தமெது ? பிந்தின க்ரந்தமெது ? என்று பெரியார்களைக் கேட்டுச் சொல்லுவீர்களா ?

65. சரமச்லோகத்தில் ஏகசப்தார்த்தமருளிச் செய்யாநின்ற பிள்ளைலோகாசாரியர் "இத்தால் வ்ரஜ என்கிற ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைத் தவிர்க்கிறது" என்றருளிச் செய்தார் இதை ரஹஸ்யத்ரயஸார சரமச்லோகாதிகாரத்திலே மறுத்துரைத்தாரென்பதையும் ஸாரஸார

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

Released by Maran's Dog ,Toronto, Canada

ரஹஸ்யத்திலே சரமச்லோகாதிகாரத்திலே முமுக்ஷுப்படியைத் தழுவியே யெழுதிவைத்தாரென்பதையும் காஞ்சீபுரம் ஸ்வாமி விவரித்திருப்பதைக் கண்டிருக்கிறீர்களா? ஸாரஸாமென்பது ரஹஸ்யத்ரயஸாரத்தின் ஸாரமென்று பொருள்கொள்ளட்டது. ரஹஸ்யத்ரய ஸாரத்தில் மறுக்கப்பட்ட அர்த்தம் தத்ஸாரத்தில் ஸ்தாபிக்கப்படுகிறதென்பதை ஸாரமாகவுணரலாம். உணர்ந்தால், ஏதோ காரணவிசேஷத்தால் தமக்குண்டாகும் அபிப்ராயபேதத்தைத் தாமே மாற்றிக்கொள்ளுகிற பரமப்ராமாணிகர் நம் வேதாந்த தேசிகனென்றுணரலாம். இதைப்பற்றி ஏதாவது சொல்லவல்லீர்களோ? ஒரு சிஷ்யன் ஜிஜ்ஞாஸயா கேட்பதாகக் கொண்டு பதிலெழுதி வைக்கக் கூடாதா?

Released by Maran's Dog ,Toronto, Canada

66 வேதாந்தவாசிரியருடைய ரஹஸ்ய நூல்களில் மூவகையான ப்ரக்ரியைகளைக் காணலாம். (1) பூர்வாசார்ய ரஹஸ்யங்களில் கண்ட பொருள்களில் சிலவற்றை அநுபபந்நமென்று கண்டிப்பது ஒரு ப்ரக்ரியை. (2) கண்டித்ததாகக் காட்டிக் கொள்ளாமலே வேறோரிடத்தில் அப்பொருளையே [தாம் கண்டித்த பொருளையே] ஸ்வஹஸ்தேந எழுதி வைத்தல் மற்றொருவகை. (3) முன்னம் தாமே கண்டித்ததைத் தாமே பிறகு தழுவுவது அபஹாஸ்யமாகுமேயென்று கருதி "அப்படியருளிச் செய்தவர்களுக்கு இப்படியபிப்ராயம்" என்று வழிவிடுதல் மூன்றாவது ப்ரணாளி. இவற்றைப் பல விஷயங்களில் கவனித்திருக்கிறீர்களா? இனியாவது கவனிப்பீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

67. முதலில் ஒருவகையபிப்ராயம் காட்டுவதும் பிறகு தாமே அதை மாற்றிக்கொள்வதுமானவிடங்கள் பலவற்றுக்கு மிக முக்கியமாக இன்றொரு விஷயம் கேண்மின். உபேயம் என்று ஒன்றும், உபாயம் என்று ஒன்றும் வழங்கப்பட்டு வருவதை யாவரும் அறிவர். உபேயம் ப்ராப்யம், பலன் என்றிவையெல்லாம் பர்யாயங்கள். உபாயம் ஸாதனம் ஹேது என்றிவையெல்லாம் பர்யாயங்கள். ஒரு உபேயத்தைப் பெறுவதற்கு ஒன்று அல்லது பல உபாயங்கள் வேண்டியிருக்கும். உபாயமில்லாமல் உபேயம் ஸித்திப்பது அரிதன்றோ. ஒருவன் ஒரு க்ராமப்ராப்தியை உபேயமாகக் கொண்டால் சகடகமநாதிகளை உபாயமாகக் கொள்ளக் காணாநின்றோம். இப்படி யெங்கும் கண்டு கொள்ளலாம். இந்த ரீதியில் மோக்ஷப்ராப்தியை உபேயமாகக் கொண்டால் அதற்கொரு ஸாதனம் இருந்தே தீரவேணுமென்னுமபிப்ராயத்தைச் சிக்கெனக்கொண்டு 'உபேயமும் அவனே, உபாயமும் அவனே' என்றறுதியிட்ட ஆசாரியர்கள்மீது அம்பு தொடுக்கும் முறையிலே தேசிகர் சிலவிடங்களில் ப்ரத்யவஸ்தானங்கள் பண்ணியிருப்பதுண்டு. ஆனால் இவ்வபிப்ராயம் நிலை நின்றிருக்கவில்லை. க்ரமேண விமர்சிக்க விமர்சிக்க, "உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் ந து குணௌ" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தி முதலானவற்றைச் சிந்தனை செய்ய தேர்ந்து கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷையில் "நிஜகர்மாதிபக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:, உபாய தாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவே து தாம் அபீ." (31) என்கிற ச்லோகத்தின் விவரணத்தில் "முக்தவ்யாபாரந்யாயேந ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தரபாவி பலஸாதநத்வாநுபபத்தி தர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதாபுத்திரபி ஸ்யாத் இதி பாவ:" என்றருளிச் செய்தாரென்பதைக் கண்டிருக்கிறீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

68. இங்கு, "நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதாபுத்திர் யுக்தா" என்றெழுதலாமாயிருக்க "மோக்ஷோபாயதாபுத்திரபி ந ஸ்யாத்" என்றெழுதியிருப்பதன் சுவையை ஆரேயறிவார்; இந்தவொரு வாக்யத்தாலே உபாயவிஷயமாகத் தாம் ஆங்காங்கு எழுதி வைத்த மறுப்பு வாக்கியங்கள் யாவும் ப்ரதிக்ஷிப்தங்களென்பதை ஸம்சய விபர்யயமற வுணரலாம். உணர்ந்தீர்களா? இத்தனையை விளக்கி விட்டிடுவோம்.

69. இக்காலத்தில் பரிசையுடையவர்களுக்குள் இருவகையாகப் பற்றி ஸம்ப்ரதாய பேதம் கோஷ்டிபேதம் புண்ட்ரபேதம் முதலான பல பேதங்கள் காணப்படுவதுபோல முற்காலத்தில் ஒரு பேதமுமிருந்ததில்லை. இருந்ததென்றே சிலர் வாதித்தாலும் அந்த பேதங்களில் நிகமாந்த

Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

குரு கலந்து கொண்டவரல்லர். எம்பெருமானாருடைய சிஷ்ய பரம்பரைகளில் அப்போது விளங்கி வந்த ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களோடும் ஆசார்யர்களோடும் ஒரு நீராகக் கலந்து பரிமாறினவரே யொழிய கைவல்யாநுபவம் போலே வேற்றுமைப்பட்டிருந்தவரல்லர். வேறொரு கோஷ்டியில் சேர்ந்திருந்தாரென்னில் இவர் ஏகாகியாய்த் தனிப்பட்டிருந்தாரென்ன வேணுமேயொழிய, வேறொரு கோஷ்டியென்பதற்கு வேறு நபர் ஒருவரும் கிடையாதென்பது திண்ணம். திவ்யப்ரபந்தங்களை நன்கு கற்றுணர்ந்து மற்ற ஸ்ரீவைஷ்ணவர்களோடு ஒரு நீராக கோஷ்டியில் கலந்து ஸேவிப்பது முதலானவற்றில் ஒத்துழைத்திருந்தாரேயல்லது பிறிகதிர்ப்பட்டிருந்தாரல்லர். அக்காலத்தில் மற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவரும் எந்த ஸந்நிவேசமாகத் திருமண்காப்பு அணிந்து கொண்டிருந்தார்களோ அந்த ஸந்நிவேசமல்லது வேறொரு ஸந்நிவேசத்தை நெஞ்சாலும் நினைத்தவரல்லர் என்கிற தத்துவத்தை யறிந்திருக்கிறீர்களா? இல்லையா? இஃது ஒருவரிருவரை மட்டும் நோக்கிக் கேட்கிற கேள்வியன்று.

70. தேசிகனிடத்தில் திருக்குமாரரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமியுந் தவிர வேறொருவரும் ஆச்ரயித்ததாகத் தெரியாமையாலே மற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் அஸூயாதிகளாலே தேசிகனை யொதுக்கி வைத்து அணுகாமலேயிருந்து தூஷித்துக்கொண்டு மிருந்தார்களென்றும், "ஹந்த ஹந்த! ராமக்ருஷ்ண ப்ராஷநைபிராபிநாம் கிம் நு சித்ரமத்ர சைத்ய ராவணாநுஸாரிணாம்" இத்யாதி ச்லோகங்களினாலும் இது ஸ்பஷ்டமாகிறது என்றும் நவீனர்கள் சொல்லி வருவதை விவேகிகளான நீங்களுமா நம்புகிறீர்கள்?

71. வேதங்கள் வேதாந்தங்கள் ஸ்ம்ருதிகள் பாஞ்சராத்ரங்கள் இதிஹாஸ புராணங்கள் திவ்யப்ரபந்தங்கள் இதர சாஸ்த்ரங்கள் ஆகிய எல்லாவற்றிலும் நிகரற்ற பாண்டித்யம் பெற்றிருந்த நம்ஸ்வாமி அக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களுள் தலைமையான ஸ்தானம் பெற்றுத் திகழ்ந்தார். பித்ருச்ராத்தத்தில் நிமந்த்ரணத்திற்கு ஒப்புக்கொண்டிருந்து ஸமயத்தில் வஞ்சித்து விட்டார்களென்றும், திருமாடியில் படிம்படி திருமாளிகை வாசலில் பாதரக்ஷையைக் கட்டி வைத்தார்களென்றும்... இப்படி அஸம்பாவிதமான ஐதிஹ்யங்களைப் பலகால் சொல்லியும் கேட்டும் பழகிவிட்டபடியால் "துர்வாஸநாந்த்ரமத:" என்று ஆழ்வான் ஸாதிக்கிற ரீதியில் இந்தப் பொய்க்கதைகளில் திடநம்பிக்கையுண்டாகி, மெய்யுரைகளை எவ்வளவு கேட்டாலும் அதைத் திரஸ்கரித்துத் தங்களுடைய மூடநம்பிக்கையையே மேம்படக்கொள்ளும் ஜனங்களிடையே வாழ்கின்ற பெரியார்களும் அந்த மூடநம்பிக்கையையே கொண்டிருப்பது ஆச்சரியமல்லவா? இனி உயர்ந்த வினைக்கள் சில கேண்மின்.

72. நிகமாந்தகுரு நம்பிள்ளையை நேராக ஸேவிக்கப் பெற்றவரல்லர்; முன்னமே அவர் திருநாட்டுக்கெழுந்தருளி விட்டபடியாலே. ஆனாலும் நம்பிள்ளை திருவாக்கினின்று பெருகின மஹார்த்த அம்ருததாரைகள் அவருடைய சிஷ்யர்களின் வியாக்கியான க்ரந்தங்களிலே தேங்கியிருந்தபடியாலே அவற்றை ஆராவமுதமாக அநுபவித்துப் பேரின்பமடைந்தவர்களில் தலைவரான நிகமாந்தவாசியர் அவ்வர்த்தவிசேஷங்களையே தம்முடைய நூல்களில் சேர்த்தருளினர் என்கிற தத்துவத்தை அறிந்திருக்கிறீர்களா? இல்லையா?

73. பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானங்களத்தனையும் தேசிகன் காலத்தில் விசேஷப்ரசாரமடைந்திருந்தபடியால் அவற்றை 'அமுதிலுமாற்ற வினிது' என்கிற ப்ரதிபத்தியுடன் பருகிக்களித்தவர்களில் தலைவராக இருந்தபடியால்தான் த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி யருளிச்செய்தபோது பெரியவாச்சான் பிள்ளையின் இருபத்துநாலாயிரப்படியையே தழுவிப் பெரும்பாலுமல்ல, முழுதும் அருளிச்செய்திருக்கிறாரென்பது அவிசால்யமாய் ஸாக்ஷிகமாயிருக்கிறது. ஸ்தோத்ரபாஷ்யத்தை யெடுத்துக்கொண்டால் ஒவ்வொரு ச்லோகத்தின் பாஷ்யத்தையும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை உடன் கொண்டு ஸேவித்தால். அவருடைய வியாக்கியான ஸரணியை இவர் எவ்வளவு தழுவியிருக்கிறார் என்பது அநாயாஸமாக விளங்கும். இதில் காஞ்சீ ஸ்வாமியின் விபுல நிரூபணங்களைக் கண்டிருக்கிறீர்களா? ஸ்ரீ ராமாநுஜன் 217 ஸேவித்திருக்கிறீர்களா?

acharya.org

74. ஸ்ரீவசநபூஷணம் நான்காவது ப்ரகரணம் ஆரம்பம்—"தீர்பாத் விபூதியிலே பரிபூர்ணநுபவம் நடவாநிற்க......என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என் அடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கொதுங்க நிழலைக் கொடுத்தாய் என்னுமாபோலே சிலவற்றை ஏறிட்டு மடிமாங்காயிட்டு......ஜந்ம பரம்பரைகள் தோறும் யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்துக் கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்" என்று ஆச்சரியமான சூர்ணிகையொன்றில் எம்பெருமானுடைய விஷயீகாரத்தின் பரிசுபாமபோஷ்யமாக நிரூபிக்கப் பட்டுளது. இந்த ஸ்ரீஸூக்தியின் கூவடறிந்த வேதாந்தவாரியார் இப்பொருளை அப்படியே அமையவைத்துப் பரமபத ஸோபாநத்தில் "அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்ய புத்தி மூலஸுக்ருத விசேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விசேஷ கடாக்ஷம் பண்ணி" என்று பணித்திருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் மதத்திற்கு இதெல்லாம் விஷமாக இல்லையா? அல்லது அம்ருதமாகவே கொண்டிருக்கிறீர்களா?

75. "உபபத்தேச் ச" (3-2-4 என்கிற ப்ரஹ்மஸூத்திரத்தின் ஸ்ரீபாஷ்யத்திலே—"ப்ராப்யஸ்ய பரமபுருஷஸ்ய ஸ்வப்ராப்தௌ ஸ்வஸ்யைவ உபாயத்வோபபத்தே:, "நாயமாத்மா ப்ரவசநேந லப்ய:......தநூம் ஸ்வாம்" இதி அநந்யோபாயத்வ ச்ரவணாத்" என்றும், "அம்ருதஸ்ய ஏஷ ஸேது" இதி அம்ருதஸ்ய ஸ்வஸ்ய ஸ்வயமேவ ப்ராபக இதி ஸேதுத்வ வ்யபதேசோபபத்தேச்ச" என்றும் இப்படியுள்ள பலபல ஸ்ரீஸூக்திகளையநுஸரித்தே நிகமாந்த குருவரரும் கீதார்த்த ஸங்கிரஹ ரக்ஷையிலே "ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தரபாவிபலஸாதநத்வ அநுபபத்தி தர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதாபுத்திரபி ஸ்யாத இதி பாவ: அந்தத; தைஸ் தை ரராதிதோ பகவாநேவ ஹி ஸர்வத்ரோபாய." என்று பணித்தாரென்பதை: மறவாமல் நெஞ்சிலே தேக்கிவைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

76. 'அதெல்லாம் வாஸ்தவந்தான்; சேதனன் சில வியாபாரங்கள் செய்துதானே தீரவேண்டும்; அவை ஸாத்யோபாயமென்பதை இல்லை செய்யமுடியாதன்றோ? என்கிறீர்களோ? உண்மையில் இது கேட்கத்தக்கதே: இதற்குக் கேண்மின். கீதையில் "அநந்யசே தாஸ் ஸததம்" என்கிற ச்லோகத்தில் [தஸ்யாஹம் ஸுலப:] என்கிற பகுதிக்கு பாஷ்ய பங்க்திகள் கேளிர் "தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே. மத்ப்ராப்த்யநுகுணஉபாஸநவிபாகம் தத்விரோதிநிரஸநம் அத்யர்த்த மத்ப்ரியத்வாதிகஞ் ச அஹமேவ ததாமீதி அர்த்த: "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:" இதி ஹி ச்ரூயதே. வக்ஷ்யதே ச "தேஷாம் ஸததயுக்தாநாம்...இதி". என்னுமிவ்வளவும் கீதாபாஷ்ய ஸூக்திகள். இவற்றின் பொருளாவது—அவனுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாதவனாய் [அவனைப் பிரிந்து தரித்திருக்கமாட்டாதவனாய்] நானே அவனை வரிக்கிறேன். என்னையடைவதற்கான உபாஸனத்தின் பரிபக்குவ நிலையையும் அதற்குற்ற இடையூறுகள் நீங்குதலையும் என்னுடைய அதிகமான ப்ரீதிக்கு இலக்காகை முதலியவை களையும் நானே கொடுக்கிறேன். "நாயமாத்மா ச்ருதியில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமாயிருப்பதோடு இந்தக் கீதையிலேயே மேலே பத்தாவது அத்தியாயத்தில் 10, 11 ச்லோகங்களாலும் சொல்லப் படுகிறது—என்பதாம். மூலத்தில் இவ்வர்த்தமுள்ளதா என்கிற விசாரத்தில் செல்லாமல் இவை கீதாபாஷ்ய பங்க்திகள்தானா? என்பதை மட்டும் பாரும். இங்கே தாத்பர்ய சந்த்ரிகையில் எவ்வளவு தெளிவு காட்டியிருக்கிறாரென்பதை பாரும். இவற்றுக்கெல்லாம் எதிரிடையான மதத்தைத்தானே தழுவியிருக்கிறீர்கள்?

77. ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸாக்ஷாத் திருவடியான திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மொழியில் (1-1-10) "பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்" என்கிற பாசுரத்தின் ஆறாயிரப்படியில், "அதி ஸூக்ஷ்மமாயிருந்த அசித் வஸ்துக்களிலும் வியாபித்து அவற்றினுள்ளே ப்ரகாசிக்கிற சித் வஸ்துக்களிலும் ஸ்தூலமான அண்டத்தில் வியாபித்தாற்

acharya.org

போலே அநாயாஸேநைவ அஸங்குசிதமாய்'' என்றார். இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? அநுமோதிக்கிறீர்களா? அல்லது கண்டிக்கிறீர்களா? அவரெழுதியிருப்பது எமக்குத் தெரியாது என்கிறீர்களா?

78. ஸ்ரீ ரங்கராமாநுஜஸ்வாமி தமது ஒன்பதினாயிரப்படியில் "ஏகைகஸ்மிந் ஜலபரமாணௌ அபி விசாலப்ரஹ்மாண்ட இவ வ்யக்திஷு ஜாதிவத் பர்யாப்தவ்ருத்தி:'' என்றார். இதன் பொருளாவது, வ்யக்திகளில் ஜாதியானது எப்படி பரிஸமாப்யவர்த்திக்கின்றதாக ஜாதிவாதிகளால் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அப்படி எம்பெருமான் ஒவ்வொரு ஜலபரமாணுவிலும் அதி விசாலமான ப்ரஹ்மாண்டத்திலிருப்பதுபோல (நெருக்குண்ணாமல்) நிறைந்திருக்கின்றான் என்பதாம். இங்கு *பர்யாப்த வ்ருத்தி:* என்றது 'பரிஸமாப்ய வர்த்தமாந: என்றபடி. முன்னோர்களோடு பின்னோர்களோடு வாசியற இங்ஙனே ஸ்வகண்டமாகப் பணித்திருக்கவும், இவ்வளவேயன்றிக்கே ந்யாயஸித்தாஞ்ஜநாநுக்ருஹீதமுமாயிருக்கவும் வீண்பிடிவாதங்கொண்டுதானே விபரீதவாதம் செய்கிறீர்கள்?

79. நம்பிள்ளை பக்கலில் ஒரு பண்டிதர் வந்து "கீதையில் அர்ச்சாவதார ப்ரஸ்தாவமேயில்லையே! ஏன்?'' என்று கேட்க, "நாலாமோத்தில் *யே யதா மாம் ப்ரபத்யந்தே தாந் ததைவ பஜாம்யஹம்* என்றதில் அர்ச்சாவதார நிலையும் அந்தர்க்கதமே காணீர்'' என்று நம்பிள்ளையருளிச்செய்ததாக வார்த்தாமாலையிலுள்ளது. திருவாய்மொழியில் (8-1-4 *உமருகந்துகந்த வுருவம் நின்னுருவமாகி* என்கிற பாசுரத்தை அர்ச்சாவதாரபரமாக நிர்வஹித்து இந்த கீதாச்லோகத்தை ஸம்வாதப்ரமாணமாக நம்பிள்ளை காட்டியருளினது ஈட்டிலும் இருபத்துநாலாயிரப்படியிலும் விசதம். இந்த கீதா ச்லோகத்திற்கு அர்ச்சாவதாரபரத்வம் கீதாபாஷ்யத்தில் இல்லை. நம்பிள்ளை நிர்வாஹமே. தேசிகன் இந்த நிர்வாஹத்தை தாத்பர்யசந்த்ரிகையில் "யே யதா மாம்'' உபக்ரமத்திலே "அத்ர க்ருஷ்ணாவதார வ்ருத்தாந்தேந ஸஹ அர்ச்சாவதார வ்ருத்தாந்தோபி ஸங்க்ருஹீத:'' என்று காட்டினர். இதனால் நம்பிள்ளை பணித்தருளும் அர்த்த விசேஷங்களில் தேசிகருக்கு எவ்வளவு பஹுமானமென்று அறிவீர்களா?

80. ஒருநாள் நம்பிள்ளையுபந்யாஸத்தில் *தம்மை யுகப்பாரைத் தாமுகப்பரென்கிற நாச்சியார் திருமொழிப் பாசுரத்தைக் கொண்டு ரஸமாக அருளிச்செய்கையில் *ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:* என்கிற கீதா ச்லோகத்தில் சகாரத்தைக் கொண்டு "ஜ்ஞாநி என்பக்கலில் செய்யும் ப்ரீதியை உபாதியாக்கி அவன் பக்கலிலே நான் ப்ரீதி பண்ணுவது பெரிதோ?'' என்றருளினதாகவுள்ளது. இதை ஸேவித்த தேசிகன் அந்த கீதாச்லோகத்தின் தாத்பர்யசந்த்ரிகை முடிவில் "ஸ ச மம ப்ரிய இத்யத்ர நிரதிசயப்ரீதிம் குர்வதோபி மஹோதாரஸ்ய ஈச்வரஸ்யாபி தத்ப்ரீத்யுபாதிகப்ரீதிகரணாத் அத்ருப்திஸ் ஸூசிதேதி கேசிதாசார்யா:'' என்றெழுதினர் (கேசிதாஹு:) என்னாமல் கேசிதாசார்யா: என்றதிலுள்ள ப்ரதிபத்தி கௌரவத்தை யுணர்ந்தீர்களா? இப்படிப்பட்ட அருமருந்தான அர்த்த விசேஷங்களை [நூற்றுக்கணக்காக] தேசிகர் நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளில் உபஜீவித்திருக்க, அந்த நம்பிள்ளையடியாகத் தோன்றிய வியாக்கியானங்களிலுள்ள குற்றங்குறைகளைக் களைவதற்காக தேசிகர் நிகமபரிமளமிட்டார்; ஐயோ அது அநியாயமாக லோபித்துவிட்டதே! என்று அழுகிறவர்களோடே கூடி நீங்களும் கழுத்தைக்கட்டிக்கொண்டு அழுகிறவர்கள் தானா?

81. ஸச்சரித்ரரக்ஷையில் *கரியமேனி மிசை வெளியநீறு சிறிதேயிடும் பெரிய கோலத்தடங்கண்ணன்* என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தின் பொருளை நிர்வஹிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது பிள்ளானுடைய ஆறாயிரப்படி வியாக்கியானத்தை அறவே உபேக்ஷித்துப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தையெடுத்துக் காட்டி 'ஆசார்யர் நிர்வஹித்த கட்டளை இது' என்று நிகமித்திருக்கிறபடியைக் கண்டிருக்கிறீர்களா?

acharya.org

ஸ்ரீராமாநுஜன் 217ல் பக்கம் 17 முதல் 38 பக்கம் வரையிலும் திகழும் நிதிகளையும் ரத்னங்களையும் நிச்சலும் சிந்தை செய்துவருகிறீர்களா ?

83. சமம் தமம் என்கிற குணங்களின் விவரணத்தில் "சமமாவது அந்த:கரண நியமனம்; தமமாவது பாஹ்யகரண நியமனம்" என்று கீதாபாஷ்யத்தில் பத்தாமத்யாயத்தில் அருளிச்செய்த பாஷ்யகாரர் தாமே பதினாறுமத்யாய பாஷ்யத்தில் அந்த:கரண நியமனத்தை தமமாகவும் பாஹ்யகரண நியமனத்தை சமமாகவும் விவரித்தருளினர். இங்கு தேசிகர் தாத்பர்யசந்த்ரிகையில் "ஏதேந கேசாஞ்சித் அநயோச் சப்தயோ: வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்யானம் நிரஸ்தம்" என்று ஸாதித்துள்ளார். சங்கரபாஷ்யத்துக்கு மறுப்பாக இது எழுதப்பட்டிருக்கவேணும். வ்யுத்க்ரமமாக உரையிட்டவர் நம்பாஷ்யகாரருமாதலால் அவருடைய ஸ்ரீஸூக்திக்கே மறுப்பாகத் தேறவில்லையா? இங்கு (ஏதேந) என்பதற்கு என்ன அர்த்தம்? 'பாஷ்யகாரர் இப்படியருளிச் செய்திருக்கையாலே? என்றுதானே அர்த்தம். நம்முடைய பாஷ்யகாரர் அருளிச்செய்ததனாலே சங்கரபாஷ்யம் எப்படி நிரஸ்தமாகும்? ஆக இங்கு இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க எத்தனை யுகம் வேணும்.

84. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் "இப்படி மத்யஸ்த்த த்ருஷ்டியாலே ப்ராமாணிகார்த்தங்கள் தோற்றச்செய்தே பற்றினது விடாதொழியில் 'த்நடபூர்வ ச்ருதோ மூர்க்க:...' என்கிற தசையாம்" என்று தலைக்கட்டியுள்ளது. இங்குக் கேள்வி:- மத்யஸ்த த்ருஷ்டியாலே ப்ராமாணிகார்த்தங்கள் தோற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிற அர்த்தங்கள் எவை? பிறர் பற்றினது விடாமல் பிடிவாதமாகச் சொல்லும் அர்த்தம் எது? இதைப்பற்றிக் காஞ்சி ஸ்வாமியின் நூல்களிலுள்ள வைசத்யங்களை உள்ளத்தில் தேக்கிக்கொண்டு விடையளிப்பீர்களா?

85. உலகில் விரல்களுக்கு மோதிரங்கள் செய்வித்து அணிவதுண்டு; முன்னடி விரலின் அளவையெடுத்துக் கொண்டு அதற்குத் தக்கபடி மோதிரம் செய்விக்கிறார்களே யொழிய முன்னடி மோதிரத்தைச் செய்வித்துக் கொண்டு அதற்குத் தக்கபடி விரலைச் சீவுவதென்பதை எங்கேனுங் கண்டதுண்டோ? உங்களுடைய கதை ஒவ்வொன்றிலும் அப்படித்தானேயிருக்கிறது நீங்களாக ஓரோர் அர்த்தங்களை முன்னடி கல்பித்து வைத்துக் கொண்டு அவற்றை தேசிகதிவ்யஸூக்திகளில் ஏறிட்டுப்பார்க்கிறீர்கள் என்பதை காஞ்சீபுரம் ஸ்வாமி எத்தனை விஷயங்களில் விளக்கிக் காட்டியிருக்கிறாரென்பதை நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? நேண்மின்

86. தேசிகன் அபயப்ரதாநஸாரம் என்கிற க்ரந்தம் அருளிச் செய்திருக்கிறாரல்லவா? அதற்கு ஆச்சரியமான மங்களச்லோகமொன்று அருளிச்செய்திருக்கிறாரே தெரியுமா? 'நமஸ் தஸ்மை கஸ்மைசந பவது நிஷ்கிஞ்சந ஜநஸ்வயம் ரக்ஷாதீக்ஷா ஸமதிக ஸமிந்தாந யசஸே' என்பது அதன் பூர்வார்த்தம். உத்தரார்த்தத்தைப் பிறகு எடுத்துக் கொள்வோம். இந்த பூர்வார்த்தத்தில்' நிஷ்கிஞ்சந ஜநஸ்வயம்ரக்ஷா தீக்ஷா" என்று ஸாதித்திருப்பதை நீங்கள் வெறுமனே வாயில் சொல்லிவருகிறீர்களே யொழிய நெஞ்சுகலிந்து சொல்வதுண்டோ? கைம்முதலில்லாதவர்களைத் தானே [நிர்ஹேதுகமாக] ரக்ஷிப்பதை விரதமாகக் கொண்டவன் எம்பெருமான் - என்றருளிச் செய்துள்ளவிதனை உள்ளுற இசைய வேணுமானால் மூக்கில் இழுத்தாக வேணுமே. ஸகிஞ்சந ஜனங்களைக் கண்ணெடுத்துப் பாரானென்றும், அகிஞ்சநஜனங்களை மேல் விழுந்துரக்ஷிப்பனென்றும், யக்கிஞ்சத வேணுமானால் அதை அவன் தானே கல்பித்தருள்வனென்றும் அருளிச்செய்கிற ஆசாரியர்களின் திருவடிநிழலிலே யொதுங்கினவர் தேசிகன் - என்கிற பரமார்த்தத்தை எத்தனை யுகமானாலும் உணரமாட்டீர்களா?

87. இனி அந்த மங்களச்லோகத்தின் உத்தரார்த்தத்தை எடுத்துக் கொள்வோம்; [ஸோராதிசஸ்வைரக்ஷணா நபிநேந்யா:தி]. அவ்வம்மையின் கதையை அறிவீர்களல்லவா?

Released by Maran's Dog ,Toronto, Canada

கௌதமமுனிவரின் மனைவியான அவள் அவருடைய சாபத்தாலே மண்ணாய்விட்டாளா? கல்லாய் விட்டாளா? என்கிற விசாரம் நமக்கு வேண்டா. இங்கு "த்ருஷ்த்தா துர்ஜாதப்ரசமநபதாம் போஜ ரஜஸே" என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்கிறார். பாதுகாஸஹஸ்ரத்திலும் "யோஷித்பூதத்ருஷந்தி - அபோடசகடஸ் தேமாநி, வைமாநிகஸ்ரோதஸ்விந்யு பலம்பநாநி" இத்யாதிச் லோகத்திலும் (யோஷித்பூதத்ருஷந்தி) என்று ஸுஸ்பஷ்டமாகவுள்ளது. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலும் "சிலாதே : ஸ்த்ரீத்வாதி : என்றார் இதில் இரண்டு ஆதிபதங்களிருப்பதால் இந்தகைய கதைகள் மற்றும் பலவுளவென்பது அறியக்கிடக்கின்றது. "திருஸாரபியாலும் கோத்வம் கழியாதிறே" என்று ஒருபக்கத்தில்; எம்பெருமானுடைய திருவடித்துகள் துர்ஜாதியை ப்ரசமநம் பண்ணுமென்று ஒருபக்கத்தில்; இதையெல்லாம் ஆராய்ந்திருக்கிறீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

88-90. சில சில தேசிக திவ்யஸூக்திகள் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளோடு இணங்குகின்றனவா? என்பது ஒரு விசாரம். உங்களுடைய கொள்கைகள் தேசிக ஸ்ரீஸூக்திகளோடு இணங்குகின்றனவா? என்பது மற்றொரு விசாரம்; தேசிக ஸூக்திகள் பரஸ்பரம் முரண்படாமல் தம்மோடு தாம் இணங்கியிருக்கின்றனவா? என்பது இன்னொரு விசாரம். ஆக மூன்று விசாரங்கள்: இவை உங்கள் நெஞ்சில் நன்றாக ஏறுகின்றனவா? மறுபடியும் விளக்கியுரைக்கிறேன் கேளுங்கள். (1) நீங்கள் தேசிக ஸூக்திகளோடு முரண்படாத கொள்கைகளைக் கொண்டிருக்கிறீர்களா? (2) தேசிகன் முன்னோர் மொழிந்த மொழிகளோடு முரண்படாத கொள்கைகளைக் கொண்டிருக்கிறாரா? (3) தேசிகன் தாம் பரஸ்பர விருத்தமாகச் சொல்லி வைக்காமலிருக்கிறாரா? ஆக இப்படி மூன்று விசாரங்கள் செய்யப்ராப்தமாகிறது. அதை எப்போது செய்யலாம்? சொல்லுங்கள். நீங்களே நன்கு அறிவீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

91. ஸ்ரீ பாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்த விரோதமில்லை, வாக்ய யோஜநா பேதமேயுள்ளது; தேசகாலாவஸ்தா விசேஷங்களாலே வரும் அநுஷ்டாந வைஷம்யம் சாஸ்த்ராநுமதம்." என்கிற இந்த ஸ்ரீஸூக்தியைப் பல பெரியார் கண்டபாடங் கொண்டிருப்பர்கள். இது எவ்வாசிரியருடைய ஸ்ரீஸூக்தி? எந்த நூலிலுள்ளது? என்பதை நினைவூட்டுகிறேன். ஸ்ரீ நிகமாந்தமஹாகுரு ரஹஸ்யக்ரந்தங்கள் எழுதத் தொடங்குகையில் முதன்முதலாகப் பணித்தது ஸம்ப்ரதாயபரிசுத்தியென்பது. அதில் நன்னடுவேயுள்ள ஸ்ரீஸூக்தியிது எம்பெருமானார் தர்சனத்தில் வரும் ஆசார்யபரம்பரைகளில் ஒன்றிலும் அர்த்தவிரோதமில்லையென்று முந்துறமுன்னம் ஸாதித்தார்; 'அப்படி ஸாதிக்கலாமோ? அர்த்த பேதங்களடியாக அர்த்தவிரோதம் காணப்படுகிறதே' என்று சிலர் கேட்க; "அர்த்த பேதமென்றோ அர்த்தவிரோதமென்றோ கொள்ளலாகாது; வாக்யயோஜநா பேதமென்று கொள்ளக் கடவதிங்கே - என்று தலைக்கட்டினார். வஸ்துஸ்திதி இங்ஙனேயிருக்க, சிலர் விபரீத ப்ரசாரங்கள் பண்ணிப்போருவது அதிதராம் அநுசிதம் என்பதை அறிவீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

92. அங்ஙனே திடமாக ஸாதித்த ஸ்வாமியினுடைய ஸ்ரீஸூக்திகளை அந்நாள் தொடங்கி இந்நாள்வரை அநுஸ்யூத பரம்பரையாகக் கொணர்ந்து கேட்டவர்களும் கேட்பித்தவர்களும் இல்லாமையாலும், இடையிலே வந்து புகுந்து அஸதர்த்த ப்ரசாரங்கள் பண்ணுமவர்கள் மலிந்திருக்கையாலும் ஸம்ப்ரதாய பேதாபம் விளைகவே வளர்ந்திட்டது. மேன்மேலும் வளர்ந்தும் வருகின்றது இதில் விவேகிகளோடு அவிவேகிகளோடு வாசியில்லாதபடி "கதாநுகதிகோ லோக:" என்னும்படியான க்ரமமே ஓங்கி வருகிறது—என்பதை உணர்ந்திருக்கிறீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

93. சில்லரை ரஹஸ்யங்களென்னப்படுகிற தேசிகரஹஸ்யங்களில் ரஹஸ்யமாத்ருகையென்பது ஒரு சிறு ரஹஸ்யம். அதன் முடிவில் ஸ்வாமியின் ச்லோகம்—"ரஹஸ்யமாத்ருகா ஸேயம் வேங்கடேச விபச்சிதா, விசுத்த தேசிகவதா ரங்கதாம்நி வ்யதிக்ஷ்யத." என்றுள்ளதைக் கண்டிருக்கிறீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

94. இங்கே ஸ்வாமி தமக்கு "விசுத்த தேசிகவதா" என்கிற விசேஷணம் எதற்காக இட்டுக் கொள்ள வேணும், மத்யமதீபந்யாயேந (அதவா) ப்ராஸாத தீபந்யாயேந முன்னும் பின்னும் அந்வயிப்பதற்காக ரங்கதாம்நி என்பதை இடையிலேயிட்டு, "விசுத்த தேசிகவதா வ்யலிக்க்யத" என்றருளிச்செய்திருக்கையாலே, ரங்கதாம்நி விசுத்த தேசிகவதா—ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளி அங்கே விசுத்த ஸம்ப்ரதாய நிஷ்டரான ஆசாரியரை அடிபணியப்பெற்றவராலே, ரங்கதாம்நி வ்யலிக்க்யத—(இந்த ரஹஸ்யம்) ஸ்ரீரங்கத்தில் எழுதப்பட்டது—என்பதாகச் சிலர் பொருள் கூறுவர். இது தெரியுமா?

95. இங்கே விவேக குசலர்கள் ஆராய்ச்சி செய்யத்தக்கதாவது, ஸ்வாமி நிகமாந்த மஹாகுரு ஒன்றிரண்டு நூல்களருளிச் செய்தவரல்ல; பரச்சதப்ரபந்த ப்ரணேதாவாக ப்ரஸித்தர் ஸ்ரீரங்கத்திலும் காஞ்சியிலும் திருவஹீந்திரபுரத்திலும் மற்றும் பலவிடங்களிலும் எழுந்தருளி யிருந்து கொண்டு பல பல பல நூல்களை யருளிச்செய்திருக்கிறார். இன்னவூரிலிருந்து கொண்டு இன்ன நூலை யெழுதினேனென்று ஒன்றிலுமருளிச் செய்திருக்கவில்லை. ப்ரக்ருத ரஹஸ்யக்ரந்தம் மிகச்சிறிது; இரண்டு பக்கமேயுள்ளது இந்தச் சிறுநூலுக்கு முன்னும் பின்னும் பல பெரிய நூல்களிருக்கின்றன அவையெல்லாம் எவ்விடத்திலிருந்துகொண்டு எழுதப் பட்டனவோ அவ்விடத்திலிருந்துகொண்டே இச்சிறுநூலும் எழுதப்பட்டதென்பதில்யார்க்கும் ஸந்தேஹமோ விவாதமோ இராது. இருக்குமென்று சொல்லுகிறீர்களா?

96. பரமதபங்கமென்னும் ரஹஸ்யக்ரந்தம் மிகப்பெரிதும் மிகமுக்கியமுமானது. அது அருளிச்செய்தவிடம் வாய்ப்பாக அமைந்ததனால் "மாதவனுர் வடகொங்கில் வானியாற்றின் வண்ணிகை நன்னடங்கண்டு மகிழ்ந்துவாழும்போது இவை நாம் பொன்னயிந்தை நகரில் முன்னுள் புணராத பரமதப்போர் பூரித்தோமே." என்று அந்நூலின் முடிவில் செய்யுளிட்டு வைத்தது மிகப்பொருத்தம் இங்கு இதைப்பற்றின விரிவு அநபேக்ஷிதம். சுருக்கமாக வுண்மைச்செய்தி கேளீர். ஸ்வாமி நிகமாந்தமஹாகுரு திருவரங்கம் பெரிய கோயிலில், அக் காலத்தில் ஆசார்ய பதவியில் அமர்ந்து நல்லடிக் காலமென்னும்படி வசந்துகொண்டிருந்த நல்லாசிரியர்களின் திருவடி நிழலில் ஒதுங்கி வர்த்திக்கவேணுமென்கிற மநோரதத்துடனே அங் கேற எழுந்தருள, அப்போது அங்கு நிலைகுலைந்திருந்ததனால் வானியாற்றின் கரைக்கு எழுந் தருளி ஸ்ரீரங்கஸ்ரீ அநுபத்ரவமாக வேணுமென்று அருளிச்செய்த அபீதிஸ்தவத்தில் *நிரஸ்தரி புஸம்பவே க்வசந ரங்கமுக்க்யே விபோ! பரஸ்பரஹிதைஷிணும் பரிஸரேஷு மாம் வர்தய* என்று, [கோயிலில் விரோதி வர்க்க க்ஷயமுண்டாகி, பரஸ்பரஹிதைஷிகளான மஹான்களின் நிழலிலே வாழ வைத்தருளவேணுமென்னை] என்று பிரார்த்தித்துக்கொண்டிருக்க, அந்த ப்ரார்த்தனை நிறைவேறி ஸ்ரீரங்கம் நிஷ்கண்டகமாகி அங்கேற வந்து சேர்ந்து, ஏற்கனவே மநோரதித் திருந்தபடியே மஹான்களின் திருவடி நிழலிலே யொதுங்கி வாழ்ந்தார். இச் செய்தியை அப்போது அங்கே ஸ்வாமி தாம் அருளிச்செய்த பகவத்த்யாந ஸோபானத்தின் முடிவிலே "ரங்காஸ்தாநே ரஸிகமஹிதே ரஞ்ஜிதாசேஷசித்தே வித்வத்ஸேவாவிமலமநஸா வேங்கடேசேந" என்று பொறித்து வைத்தார், இந்தச்லோகமும், "விசுத்த தேசிகவதா வேங் கடேசேந" என்கிற (கீழே காட்டிய) சுலோகமும் சேர்த்து அநுஸந்திக்கப் பட்டால் உண்மை விளங்குமா? விளங்காதா?

97. "ரங்காஸ்தாநே வித்வத்ஸேவாவிமலமநஸா" என்றதை பிராமாணிகர்கள் நெஞ்சில் புந:புநராவ்ருத்திபண்ணவேணும். "ஸ்ரீரங்கத்தில் வித்வான்களை யடிபணிந்து மனத் தூய்மை பெற்றே"னென்று அருளிச் செய்கிறார். 'ஸ்ரீரங்கத்தில் என்பதற்கு வித்வத்ஸேவேத்யாதியில் அந்வயமில்லை' என்று சிலர் வாதாடுவதுண்டு. அங்ஙனே எங்ஙனேயாயினுமாகுக. 'வித்வத் ஸேவாவிமலமநஸா' என்பதற்குப் பொருள் கூறியாக வேண்டுமே. ஸ்வாசார்யரான கிடாம்பியப் புள்ளாரைக் கருதி வித்வச்சப்தப்ரயோகம் பண்ணினரென்றால் இதை ப்ராமாணிகர்கள் இசையக்

acharya.org

கூடுமா? 'அவர் வித்வானல்லவோ' என்று கேட்டுவிடவேண்டா. அன்றியும் "வித்வத்ஸேவா ரஸிகமநஸா" 'வித்வத்ஸேவாலாலஸமநஸா" "வித்வத்ஸேவாமஹிதமநஸா" இத்யாதிகளான பல ப்ரகாரங்களை விட்டு "வித்வத்ஸேவா கிமுகமநஸா" என்றருளியதை உற்றுநோக்க வேண்டாவா? நிஷ்கல்மஷ—நிஷ்களங்க பர்யாயமான விமலபதத்தை ப்ரயோகித்ததனால், மனத்தில் முன்பு ஏதோ களங்கமிருந்து கழிந்ததாக நன்கு விளங்க வில்லையா? (கீழே காட்டிய) விசுத்த தேசிகவந்தா என்ற ஸ்ரீஸூக்தி இதற்கு இணங்கியிருக்க வில்லையா? ஆத்ம வஞ்சனையின்றிக்கே பார்க்க வேண்டாவா? பார்த்தால், அதிகரணஸாராவளியில் "பாஷ்யாதி க்ரந்தலேசோபி அவஹிதமநஸாம் ஐதமர்த்யம் பஜேத" என்று ஸ்வாமி தாமருளிச் செய்த கணக்கிலே இதுதான் பொருத்தமான பொருளென்று நடுநிலையாளரின் உள்ளம் சொல்லாதா? சொல்லுங்கள்.

98. இந்த ப்ரஸங்கத்தை மிகச் சிறு விஷயமென்று விட்டிடுவோம். ஸ்வாமி தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளில் ஸந்நிவேசமிருக்கும்படியை யாரும் அபலபிக்க முடியாதே. ஸ்வாமி தம்முடைய பல க்ரந்தங்களில் பலபல அர்த்தங்களைப் பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைத் தழுவியேயன்றோ அருளிச் செய்திருக்கிறார். இதை வழிப்போக்கு வார்த்தையாக விட்டுவிடாமல் அபேத்ய நிரூபணமென்று கொள்க. அதுவும் (ஸ்ரீராமாநுஜன் 217ல்) பிரசுரிக்கப் பட்டிருப்பது கண்டிருக்கிறீர்களல்லவா? (ஸ்ரீராமாநுஜன் 213ல்) "பெரியவாச்சான்பிள்ளை ஸூக்திகளில் நிகமாந்தகுரு ப்ராவண்யம்" என்ற வியாஸத்திலும் காஞ்சீஸ்வாமி முதலித்திருக்கிறாரே அதைக் கண்டிருக்கிறீர்களா?

99. உபயவேதாந்த ரஹஸ்யார்த்தங்களை நம்பிள்ளை பக்கலில் நேராகக் கேட்டுப் பட்டோலை கொண்டவர்கள் பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையுமான இருவர். இவர்களுள் வடக்குத் திருவீதிப்பிள்ளை யிட்டருளின வியாக்கியானங்கள் தேசிகர்க்குக் கிடைக்க ப்ரஸக்தியில்லாமலிருந்தது; பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானங்களைத்தனையும் இவர் காலத்தில் விசேஷ ப்ரசாரமடைந்திருந்தபடியால் அவற்றை 'அமுதிலுமாற்ற வினிது' என்கிற ப்ரதிபத்தியுடன் பருகிக் களித்தவர்களில் தலைவராகவே யிருந்தார் தேசிகர். இதற்கு எண்ணிறந்த சான்றுகளுண்டு. சிலவற்றை இங்குக் காட்டுவோம். த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி யருளிச்செய்தபோது பெரியவாச்சான்பிள்ளையின் இருபத்துநாலாயிரப் படியையே தழுவிப் பெரும்பாலுமருளிச் செய்திருக்கிறாரென்பது அவிசால்யமாக ஸஸாக்ஷிகமாய்ப் பலகால் நிரூபிக்கப்பட்டது. இங்குக் காண்மின் ;

100. ஸ்தோத்ரபாஷ்யத்தில் ஒவ்வொரு ச்லோகத்தின் பாஷ்யத்தையும் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தை உடன்கொண்டு ஸேவித்தால், அவருடைய வியாக்கியான ஸரணியை இவர் எவ்வளவு தழுவியிருக்கிறார் என்பது அநாயாஸமாக விளங்கும். "நமோ சிந்த்யாத்புத" என்கிற முதல் ச்லோகத்திலிருந்தே பார்க்கலாம். பெரியவாச்சான்பிள்ளை உதாஹரித்தருளுகிற ஸம்ஸ்க்ருத ப்ரமாணங்களை நூற்றுக்கு எண்பது பங்கு விடுவதில்லை தேசிகன். இது அநுமாநமன்று, உத்ப்ரேக்ஷையன்று, உல்லேகமன்று. இரண்டு ஸ்ரீகோசங்களும் ஸர்வஸுலபமேயிறே தற்பொழுதன்றே, எடுத்துப் பரீக்ஷிக்கலாமே. ப்ரமாணங்களைக் கொள்வது மட்டுமேயன்று. பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திற் காணும் இன்சுவைமிக்க பொருள்களை அப்படியே தழுவிக் கொள்வதையும் காணலாம் இதற்கு நூறிடங்கள் எடுத்துக் காட்டலாம்; ஆயினும் விரிவு காண்பாரில்லாமையாலே இங்குச் சிலவிடங்களே காட்டப்படுகின்றன. முதல் ச்லோகத்தில் "ஜ்ஞாந வைராக்யராசயே" என்றவிடத்தில் வாரிராசி:, ஜலராசி: இத்யாதி ஸ்தலங்களிற் போல ஜ்ஞாநவைராக்யங்களுக்கு ராசியாயிருப்பவர் என்கிற பொருளே எல்லார்க்கும் தோன்றக்கூடியது. இது ஸங்கதமான பொருளேயன்றி அஸங்கதமான பொருளன்று. இவ்வகைப் பொருளை முந்துறப் பணித்தார் தேசிகன்; இங்கே பெரியவாச்சான்பிள்ளை பணித்தருளியவை விசேஷித்து ராசியென்பதற்கு ஸமூஹப் பொருளைக் கொண்டு ஜ்ஞாந ஸமூஹங்களையும் வைராக்ய ஸமூஹங்களையும்

acharya.org

முடையவர் என்றுரைத்து, ஜ்ஞாநமும் வைராக்யமும் ஒன்றுயிருக்க ராசியென்னலாமோவென்று
சங்கித்துக்கொண்டு 'பகவத் ஸ்வரூபாதிகள் ஜ்ஞான விஷயங்களாகையாலே பல; த்யாஜ்ய
விஷயங்களும் பலவாகையாலே வைராக்யங்களும் பலவென்று சொல்லலாம். என்று அருளிச்
செய்திருக்கிறுர். தேசிகன் பாஷ்யத்தில் இதை அப்படியே மொழி பெயர்த்திருக்கிறுர். மேலே
அகாத பகவத் பக்திஸிந்தவே என்றவிடத்திலும் பக்திக்குக் கடலாயிருப்பவர் என்று பொருள்
கொள்ளாமல், *காதல் கடல்புரைய விளைவித்த* *காதல் கடலின் மிகப்பெரிதால்* இத்யாதி
திவ்ய ஸூக்திகளுக்குச்சேர பக்தியைக் கடலாக ரூபித்து அகாதமான பகவத் பக்திஸிந்துவை
யுடையவர் என்று உரைத்தார் பெரியவச்சான்பிள்ளை; தேசிகன் அதைத் தழுவி "பக்திம் வா
ஸிந்துத்வேந ரூபயித்யா பஹுவ்ரீஹி:" என்று பணித்தார். "ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே*
என்றவிடத்தில் லோகே என்பதற்கு (ஸம்ஸாரி ஜநே) என்று முதலில் ஸாமாந்யமாகப் பொருள்
பணிந்த தேசிகன் (லோகே—சாஸ்திரத்தில்) என்றுள்ள பெரியவாச்சான்பிள்ளை வியாக்கி
யானத்தை ஸேவித்து அப்படியே யருளிச்செய்தார். *வசீ வதாந்யோ குணவாந்* என்ற
ச்லோகத்தில் அநுபவிக்கப்பட்ட பன்னிரண்டு திருக்குணங்களையும் விவரித்தருளாநின்ற
தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தையே ப்ராயேண மொழியெயர்த்திருக்கின்றுர்.
சிறிது மேலே போவோம்; *அசிந்த்யதிவ்யாத்புதேத்யாதி ச்லோகத்திற்குப் பெரியவாச்சான்
பிள்ளை இட்டருளின அவதாரிகையையே சிறிது சுருக்கி மொழிபெயர்த்திருக்கின்றுர் தேசிகன்.
பக்தஜநைக ஜீவிதம் என்பதற்கு பக்தஜநங்களுக்கு தாரகாதிகளெல்லாம் தானேயாயிருக்குமவன்
என்றும் பக்தஜனங்களையே தனக்கு தாரகமாகவுடையவன் என்றும் இரண்டுவிதமாகப் பொருள்
பணித்தார் பெரியவாச்சான்பிள்ளை; தேசிகனும் அப்படியே பாஷ்யமிட்டருளினுர். இது தெரியுமா?

101. இதற்கு அடுத்தது ஸமர்த்தம் என்பது; இதற்கும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கி
யானத்தை யநுஸரித்தே பாஷ்யமுள்ளது. எம்பெருமானுக்கு ஸமர்த்தம் என்றல்லவோ இங்கு
விசேஷணமுள்ளது க்ஷுத்ரர்களான நாமெல்லாருங்கூட ஸமர்த்தர்களென்று கொண்டாடப்
படுகிறேம். எம்பெருமானை ஸமர்த்தனென்றால் அவனுடைய ஸாமர்த்தியம் ஸாமாந்யமா
யிருக்கமுடியாதே; இந்த எவ்விதமான விசேஷத்தைக் காட்டலாமென்று விமர்சித்த
பெரியவாச்சான்பிள்ளை ஆளவந்தாருடைய திருவுள்ளத்தை உள்ளபடி புணர்ந்து தமது
வியாக்கியானத்தில்—"[ஸமர்த்தம்] அளவுடையரான நித்ய ஸூரிகள் அநுபவிக்கும் தன்னை
நித்ய ஸம்ஸாரிகள் அநுபவிக்குமிடத்தில் "ஆற்றநல்லவகை காட்டுமம்மானை" என்கிறபடியே
ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவிப்பிக்கும் ஸாமர்த்யத்தையுடைய" என்றருளிச் செய்தார்!
உண்மையில் எம்பெருமானுக்கு இதுதான் அற்புதமான சாமார்த்தியம். இப்பங்க்திகளை
ஸேவித்த தேசிகன் இவ்வர்த்தத்தை மிகவும் ரஸித்து இதை அப்படியே மொழிபெயர்த்தவர்
போல் "ஆச்ரிதாநாம் ஸாத்ம்ய போக ப்ரதாநே" என்று அருளிச்செய்தார். ஸாத்ம்ய என்கிற
ஸம்ஸ்க்ருதபதம் சிறிது அபூர்வமான து ஈர ஸௌச்ருதாதிகளிலே கையாண்டது. நம் ஆசார்யர்
களின் திவ்யக்ரந்தங்களில் தான் இந்த பதம் விசேஷமாகக் காணப்படும். திருவாய்மொழியில்
(1—9.) இவையுமவையுமுவையும்* என்கிற பதிகத்தில் எம்பெருமான் ஆழ்வார்க்கு
ஸ்வாநுபவத்தை ஸாத்மிக்க ஸாத்மிக்கக் கொடுத்தருளினதாகப் பெரியவாச்சான்பிள்ளை
அவதாரிகையிட்டருளினர்; அதை யநுஸரித்து தேசிகன் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய
ரத்நாவளியில் "விபுமநுபுபுஜே ஸாத்ம்ய போகப்ரதாநாத்" என்றருளிச் செய்தார். அந்த
ப்ரயோகத்தையே இங்கும் செய்தருளியுள்ளாரென்பதை அறிவீர்களா?

கீழ் 81வது லக்கத்தில் கண்ட விஷயத்தின் விசதீகரணம்.

102. ஸச்சரித்ர ரக்ஷையில் ஊர்த்வபுண்ட்ர விசாரபரமான இரண்டாமதிகாரத்தில் *கரிய
மேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும். பெரிய கோலத் தடங்கண்ணன் (4-5-6)* என்ற திருவாய்
மொழிப் பாசுரத்தைப்பற்றி அர்த்தவிசாரம் செய்யப்புகுந்து "சக்ஷுஷி தத்தாரணம் தத்ர விஹித
மிதி அஞ்ஜநபரத்வமாஹுராசார்யா:" என்று எழுதியுள்ளார் தேசிகன். இங்கு ஆசார்யா: என்

acharya.org

முடையவர் என்றுரைத்து, ஜ்ஞாநமும் வைராக்யமும் ஒன்றாயிருக்க ராசியென்னலாமோவென்று சங்கித்துக்கொண்டு 'பகவத் ஸ்வரூபாதிகள் ஜ்ஞான விஷயங்களாகையாலே பல; த்யாஜ்ய விஷயங்களும் பலவாகையாலே வைராக்யங்களும் பலவென்று சொல்லலாம், என்று அருளிச் செய்திருக்கிறார். தேசிகர் பாஷ்யத்தில் இதை அப்படியே மொழி பெயர்த்திருக்கிறார். மேலே *அகாத பகவத் பக்திஸிந்தவே* என்றவிடத்திலும் பக்திக்குக் கடலாயிருப்பவர் என்று பொருள் கொள்ளாமல், *காதல் கடல்புரைய விளைவித்த* *காதல் கடலின் மிகப்பெரிதால்* இத்யாதி திவ்ய ஸூக்திகளுக்குச்சேர பக்தியைக் கடலாக ரூபித்து அகாதமான பகவத் பக்திஸிந்துவை யுடையவர் என்று உரைத்தார் பெரியவச்சான்பிள்ளை; தேசிகன் அதைத் தழுவி "பக்திம் வாஸிந்துத்வேந ரூபயித்வா பஹுவ்ரீஹி:" என்று பணித்தார். "ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே* என்றவிடத்தில் லோகே என்பதற்கு (ஸம்ஸாரி ஜநே) என்று முதலில் ஸாமாந்யமாகப் பொருள் பணித்த தேசிகன் (லோகே—சாஸ்திரத்தில்) என்றுள்ள பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை ஸேவித்து அப்படியே யருளிச்செய்தார். *வசீ வதாந்யோ குணவாந்* என்ற ச்லோகத்தில் அநுபவிக்கப்பட்ட பன்னிரண்டு திருக்குணங்களையும் விவரித்தருளாநின்ற தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தையே ப்ராயேண மொழிபெயர்த்திருக்கின்றார். சிறிது மேலே போவோம்; *அசிந்த்யதிவ்யாத்புதேத்யாதி ச்லோகத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை இட்டருளின அவதாரிகையையே சிறிது சுருக்கி மொழிபெயர்த்திருக்கின்றார் தேசிகன். பக்தஜநைக ஜீவிதம் என்பதற்கு பக்தஜநங்களுக்கு தாரகாதிகளெல்லாம் தானேயாயிருக்குமவன் என்றும் பக்தஜனங்களையே தனக்கு தாரகமாகவுடையவன் என்றும் இரண்டுவிதமாகப் பொருள் பணித்தார் பெரியவாச்சான்பிள்ளை; தேசிகனும் அப்படியே பாஷ்யமிட்டருளினார். இது தெரியுமா?

101. இதற்கு அடுத்தது ஸமர்த்தம் என்பது; இதற்கும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை யநுஸரித்தே பாஷ்யமுள்ளது. எம்பெருமானுக்கு ஸமர்த்தம் என்றல்லவோ இங்கு விசேஷணமுள்ளது க்ஷுத்ரர்களான நாமெல்லாருங்கூட ஸமர்த்தர்களென்று கொண்டாடப் படுகிறோம். எம்பெருமானை ஸமர்த்தனென்றால் அவனுடைய ஸாமர்த்தியம் ஸாமாந்யமாயிருக்கமுடியாதே; இங்கு எவ்விதமான விசேஷத்தைக் காட்டலாமென்று விமர்சித்த பெரியவாச்சான்பிள்ளை ஆளவந்தாருடைய திருவுள்ளத்தை உள்ளபடி யுணர்ந்து தமது வியாக்கியானத்தில்—"[ஸமர்த்தம்] அளவுடையரான நித்ய ஸூரிகள் அநுபவிக்கும் தன்னை நித்ய ஸம்ஸாரிகள் அநுபவிக்குமிடத்தில் "ஆற்றநல்லவகை காட்டுமம்மானை" என்கிறபடியே ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவிப்பிக்கும் ஸாமர்த்யத்தையுடைய" என்றருளிச் செய்தார். உண்மையில் எம்பெருமானுக்கு இதுதான் அற்புதமான சாமார்த்தியம். இப்பங்க்திகளை ஸேவித்த தேசிகன் இவ்வர்த்தத்தை மிகவும் ரஸித்து இதை அப்படியே மொழிபெயர்த்தவர் போல் "ஆச்ரிதாநாம் ஸாத்ம்ய போக ப்ரதாநே" என்று அருளிச்செய்தார். ஸாத்ம்ய என்கிற ஸம்ஸ்க்ருதபதம் சிறிது அபூர்வமான து ஈரஸௌச்ருதாதிகளிலே கையாண்டது. நம் ஆசார்யர்களின் திவ்யக்ரந்தங்களில் தான் இந்த பதம் விசேஷமாகக் காணப்படும். திருவாய்மொழியில் (1—9.) இவையுமவையுமுவையும்* என்கிற பதிகத்தில் எம்பெருமான் ஆழ்வார்க்கு ஸ்வாநுபவத்தை ஸாத்மிக்க ஸாத்மிக்கக் கொடுத்தருளினதாகப் பெரியவாச்சான்பிள்ளை அவதாரிகையிட்டருளினர்; அதை யநுஸரித்து தேசிகன் த்ராமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் "விபுமநுபுங்க்தே ஸாத்ம்ய போகப்ரதாநாத்" என்றருளிச் செய்தார். அந்த ப்ரயோகத்தையே இங்கும் செய்தருளியுள்ளாரென்பதை அறிவீர்களா?

கீழ் 81வது லக்கத்தில் கண்ட விஷயத்தின் விசதீகரணம்.

102. ஸச்சரித்ர ரக்ஷையில் ஊர்த்வபுண்ட்ர விசாரபரமான இரண்டாமதிகாரத்தில் *கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதே யிடும், பெரிய கோலத் தடங்கண்ணன் (4-5-6)* என்ற திருவாய் மொழிப் பாசுரத்தைப்பற்றி அர்த்தவிசாரம் செய்யப்புகுந்து "சக்ஷுஷி தத்தாரணம் தத்ர விஹித மிதி அஞ்ஜநபரத்வமாஹுராசார்யா:" என்று எழுதியுள்ளார் தேசிகன். இங்கு ஆசார்யா: என்

Released by Maran's Dog ,Toronto, Canada

கிற சொல்லால் பெரியவாச்சான் பிள்ளையையே விவக்ஷிக்கிருரென்பது அசைக்க முடியாதது ஏன்? மேலே குறித்த பாசுரத்திற்குப் பிள்ளானுடைய ஆருயிரப்படி வியாக்கியானம்:—"நீலமேக நிபதிவ்ய ரூபோசித திவ்யாங்கராகத்தாலே அநுலிப்தனாய், அதிவிசாலமாயு திரமணீயமாயிருப்பதொரு தாமரைத் தடாகம் போலே யிருந்த திருக்கண்களையுடையனாய்" என்பது. இதனால், வெளிய நீறு என்பதற்கு திவ்யாங்கராகமென்னும் பொருள் கொள்ளப்பட்டதென்பதும், 'கரியமேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்' என்கிற முதலடியானது எம்பெருமானுக்கு விசேஷணமாகக் கொள்ளப்பட்டதென்பதும் நன்கு விளங்கிற்று. பெரியவாச்சான் பிள்ளையினுடைய வியாக்கியானத்தில் அருளிச்செய்திருக்கும் விதமாவது பிள்ளானருளிச்செய்த விதத்திற்காட்டில் மிக வேறுபட்டது, 'வெளிய நீறு' என்பதற்கு அஞ்ஜந சூர்ணமென்று பொருள் கொள்ளப்பட்டது. [வெளியம்—அஞ்ஜனம்.] "கரியமேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும் என்கிற முதலடி எம்பெருமானுக்கு விசேஷணமாகக் கொள்ளப்படாமல் 'பெரியகோலத் தடங்கண்ணன்' என்றதன் ஏகதேசமான திருக்கண்களுக்கு விசேஷணமாகக் கொள்ளப்பட்டது 'திருக்கண்களின் கரிய விழியினுடைய கறுத்த நிறத்தின் மேலே அஞ்ஜநசூர்ணத்தை யிடப்பெற்ற திருக்கண்களையுடையவன்' என்னும் தாத்பரியம் பெரியவாச்சான்பிள்ளை முதலானருடைய வியாக்கியானங்களில் மாத்திரம் காண்கிறது. பிள்ளானுடைய வியாக்கியானம் இதனில் மிக வேறுபட்டதென்பது புநருக்தம். "அஞ்ஜநபரத்வமாஹுராசார்யா:"* என்றெழுதிய தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை முதலானரையே ஆசார்யராகச் சுட்டினரென்பது நிஸ்ஸந்தேஹவிபர்யயம்: பிள்ளானுடைய வியாக்கியானத்தில் நீறு என்பதற்கு அஞ்ஜநபரத்வமும் கூறப்படவில்லை. சக்ஷுஷி தாரணமும் காட்டப்படவில்லையன்றோ. ஆருயிரப்படியில் "திவ்யாங்கராகத்தாலே அநுலிப்தனாய்" என்கிற பங்க்தி ஸுஸ்பஷ்டமாயிருக்கையாலே நீறு என்பதற்கு அங்கராகப் பொருளும் அந்த அங்கராகத்தினால் திருமேனி அநுலிப்தமாயிருக்கிறதென்பதுமே பிள்ளானுடைய திருவுள்ளமாகத் தேறுகிறது. ஆக் ஸச்சரித்ரரக்ஷையில் ஆசார்யா ஆஹு: என்று எடுத்துக்காட்டியிருக்கும் விஷயம் பிள்ளானுடைய படியில் கிடையாதென்றும் நம்பிள்ளையின் பரம்பரையினருடைய வியாக்கியானங்களிலேயே உள்ளதென்றும் நிஸ்ஸந்தேஹமாகத் தேறுகின்றது. (கேசித் ஆஹு:) என்னமல் ஆசார்யா ஆஹு: என்றெழுதியிருக்கையாலே நம்பிள்ளை பரம்பரையில் வந்த மஹான்களையே தமக்கு ஆசார்யராகக்கொண்டு உஜ்ஜீவித்தவர் தேசிகன் என்கிற பரமார்த்தம் நிஷ்கல்மஷமாகத் தேறுகின்றது. மாச்சரியத்தை யகற்றி நடுநிலையில் நின்று காண்பீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

103. தேசிகன் உபயவேதாந்தத்தையும் குருமுகமாக அதிகரித்தவர் என்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். திருவாய்மொழிக்கு ஒரு வியாக்கியானமும் அவதரியாதிருந்த காலத்துப் பூர்வாசார்யர்கள் மூலத்தை வைத்துக்கொண்டே ஸ்வஸ்வாசார்யர்களிடத்தில் அர்த்த ச்ரவணம் பண்ணிவந்தார்கள். பிள்ளானுடைய ஆருயிரப்படி அவதரித்த பின்பு அக்காலத்திலுள்ளவர்கள் அதைக்கொண்டு காலக்ஷேபம் செய்திருப்பர்கள் நஞ்சீயருடைய ஒன்பதினாயிரப்படியும் சுருக்கம். பிறகு பெரியவாச்சான் பிள்ளையின் இருபத்து நாலாயிரப்படி மிக விரிவாகவும் ரஸபரிபுஷ்டமாகவும் அவதரித்தபடியினாலே அக்காலத்திலிருந்தவர்கள் யாவரும் அந்த இருபத்து நாலாயிரப்படி கொண்டே காலக்ஷேபம் செய்து வந்தார்கள். அடுத்தபடியாக ஈடுமுப்பத்தாறாயிரப்படி அவதரித்திருந்தும் அது அக்காலத்தில் பிரசாரமடையாமல் பிறகு பிரசாரமடைந்தபடியினால் அந்த மத்யகாலத்தில பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானமே தேசிகன் முதலானர்க்கும் காலக்ஷேப க்ரந்தமாக விளங்கிற்று—என்னுமிது அளவுகடந்த ஸாக்ஷியங்களால் அவிசால்யமாகக் காட்டிச் செய்த நிருபணங்கள் ஸாமர்த்யரஜ்ஞர்களின் புத்திக்கு எட்டமாட்டாதவை. (1-8) ஓடும் புள்ளேறி. (1-10) பொருமா நீள்படை. (2-8) அணைவதரவணைமேல்......இவை முதலான பதிகங்களுக்கு ஆருயிரப்படியிலுள்ள அவதாரிகைகள் வேறுவிதம் பெரியவாச்சான். பிள்ளையிருபத்து நாலாயிரப்படியிலுள்ள அவதாரிகைகள் வேறுவிதம். இதை ஒவ்வொருவரும் அநாயாஸமாக அறியலாம்; தேசிகன் இருபத்து நாலாயிரப்படியையே அடியொற்றி த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியையும் த்ரமிடோபநிஷத் ஸாரத்தையும் ஸாதித்திருக்கிருர்.

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

104. பத்தாம்பத்தில் முதல்திருவாய்மொழி *தாளதாமரை யென்பது. இதில் திருமோகூரெம்பெருமானுடைய அநுபவம் நிகழ்கின்றது. இத்திருவாய்மொழிக்கு அவதாரிகையிட்டருளின திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஆறாயிரப்படியில்—"திருக்கண்ணபுரத்திலெம்பெருமானை யநுபவித்து இப்போது திருமோகூரிலெம் பெருமானை யநுபவிக்கிறார்" என்று இவ்வளவே யருளிச்செய்தார். மேற்பாசுரங்களிலும் ஸாதாரணமாகப் பாசுரப்பொருளே பணித்துள்ளார். மற்ற ஆசார்யர்களெல்லாரும் இங்கு ஒரு விசேஷமருளிச் செய்கிறார்கள்; அதாவது—ஆழ்வார் கீழ் *மாலைநண்ணித் திருவாய்மொழியில் *சரணமாகுமென்கிற பாசுரத்தில் தம்முடைய பரமபத யாத்திரையை நிச்சயித்து அர்ச்சிராதி மார்க்க கதியை யறுதியிட்டு அந்த கதிக்குத் திருமோகூர்க் காளமேகப் பெருமானை வழித்துணையாகப் பற்றுகிறார் இத்திருவாய் மொழியில்—என்பதே' மணவாளமாமுனிகள் நூற்றந்தாதியில் *தாளதாமரையுடைய *தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம். காளமேகத்தைக் கதியாக்கி* என்றருளிச் செய்தார். ஆசார்யஹ்ருதயத்தில் "மார்க்கபந்து சைத்யம் மோஹனத்தே மடுவிடும்" என்று பணிக்கப்பட்டது பெரியவாச்சான்பிள்ளை இருபத்து நாலாயிரப்படி முதலானவற்றிலும் 'காளமேகப்பெருமானை வழித்துணையாகப் பற்றுகிறார். என்றுள்ளது இவ்விதமாக ப்ரமேயசிக்ஷை ஆறாயிரப்படியில் லேசமேனுமாகக்கூட கிடையாது

Released by Maran's Dog ,Toronto, Canada

105. இனி, தேசிகனது த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும் தத்ஸாரத்திலும் பார்க்கவேணும். ரத்நாவளியில் (104) *தைத்யாநாமித்யாதி ச்லோகத்தில் "ச்ராந்திஹாரித்வமுக்யை ராகாரைஸ் ஸத்கதிஸ் ஸ்யாத்" என்கிறார். *ஸத்கதிஸ் ஸ்யாத்* என்பதற்கு வியாக்கியானமிட்டவர்கள் "காளமேகப்பெருமானே வழித்துணையென்று" என்றெழுதி வைத்தார்கள். த்ரமிடோபநிஷத் ஸாரத்திலும் இப்பதிகத்தில் தேறின குணமாக "ஸத்பதவ்யாம் ஸஹாயம் ஸ்ரீசம் ப்ராஹ" என்றருளிச் செய்தார். *ஸத் கதிஸ் ஸ்யாத்* என்ற தாத்பர்ய ரத்நாவளிக்கு *ஸத்பதவ்யாம் ஸஹாயமென்னலிது கைவிளக்காயிருக்கின்றது.

106. இப்படி இன்னும் பலவிடங்கள் உண்டு; தேசிகனுக்கு ஆறாயிரப்படியில் த்வேஷம் என்றோ வெறுப்பு என்றோ சொல்லுகிறோமல்லோம். அது மிகவும் சுருக்கமான வியாக்கியானமாயிருக்கிறபடியால் அதை ஒருகால் ஸேவித்து நிறுத்தி, பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் அதற்கு நான்மடங்கு விரிவாகவும் ரஸகனமாகவும் இருக்கிறதென்ற காரணத்தினால் தேசிகனதாம் இதுதன்னையே நிதியாகக் கொண்டு இதையே தமக்குக் காலக்ஷேபக்ரந்தமாக ஆதரித்து வந்தார். நவீனர்களுக்கு இவ்வுண்மையுரை விஷமாயிருக்கும். நிக்ஷேபரிமலத்தில் பெரியவாச்சான் பிள்ளையைக் கண்டித்துவிட்டாராம். இன்னமும் அந்தப் பேச்சு பேசுவீர்களா?

Released by Maran's Dog ,Toronto, Canada

107. பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த வியாக்கியானங்கள் தேசிகருடைய காலத்தில் நன்றாக ப்ரவசனத்தில் வந்துவிட்டனவென்கிற விஷயம் தேசிகருடைய ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில்—"குலந்தருமென்கிற பாட்டுக்கு வியாக்கியானம் பண்ணின அபியுக்தரும் ஜன்மத்தால் வ்ருத்தத்தால் குறைந்தானொருத்தனுக்கு பகவத் ஸம்பந்தமுண்டானால் அவனை இவையுடையானொருத்தன் தாழ நினைக்கக் கூசவேண்டும்படியாயிற்று பகவத்ப்ரபாவமிருக்கும்படி. ஆனால் அவர்களோடு பெண் கொடுத்துக் கொள்ளுகிறதில்லையே யென்னில் அது ஜாதிநிபந்தனம், ச்லாகை குண நிபந்தனம்' என்று நிஷ்கர்ஷித்தார்கள்" என்று பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான பங்க்திகளையே உதாஹரித்திருப்பதனால் ஸுஸ்பஷ்டமாகிறது.

108. இதனால் பெரியவாச்சான் பிள்ளை தேசிகருக்கு முற்பட்டவர் என்பது நிஸ்ஸந்தேஹஸித்தம். மேலே உதாஹரித்த பங்க்திகளில் அபியுக்தரென்றது பெரியவாச்சான் பிள்ளையையென்று இஞ்சிமேட்டழகிய சிங்கர் வரையிலுமுள்ள வ்யாக்யாதாக்களெல்லோரும் எழுதி வைத்தார்கள். பார்த்திருக்கிறீர்களா; இனியாவது பாருங்கள்.......................................*

சதப்ரச்நரத்நாவளி முற்றிற்று.

Released by Maran's Dog ,Toronto, Canada